32

REGD. No. M. 2913.

ஆர்யதர்மம்

சந்தா விபரம்.
[தபால் சிலவுள்பட]

ஜீவிய சந்தா	...	ரூ 50
ஒரு வருஷ சந்தா	...	ரூ. 3
ஆறுமாத சந்தா	...	ரூ. $1\frac{1}{2}$

தனிப்பிரதி ஓரணு
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்

வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

விளம்பர விகிதம்.

ஒரு முழுப்பக்கம் ஒரு தடவை	ரூ. 20
அரைப்பக்கம் ஒரு தடவை	ரூ. 12
ஒருபத்தி ஒரு தடவை	ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு ஒரு தடவை	அணு 8

நீண்டகால விளம்பரங்களுக்கு தனி சார்ஜ்.

பு-25 | கும்பகோணம் விக்ரம-ஹு மார்கழி-மீ 12௳ 1940- ஹு டிஸம்பர்-மீ 26௳ | ஸ-50

வாரக் குறிப்புகள்

ஸ்ரீ வத்ஸ. வே. ஸோ. சர்மா

நன்றியும் கடமையும்!! ஆர்ய தர்மம் நிர்வாஹிகள் பேப்பர்விலை ஏறியிருக்கும் இச்சமயத்தில் சந்தாவைக்குறைத்ததற்கு ஆஸ்திகர் நன்றி செலுத்துவதுடன் குறைந்த பக்ஷம் ஊருக்கோர் பத்திரிகையேனும் வாங்கி அவர் செயலை ஸபலமாக்குக!!

நமக்குள் சண்டையா! மத த்வேஷம் கொழுந்து விட்டெரியும் போது எவர் செய்யும் சிறிய உதவியையும் வரவேற்பது ஆஸ் [illegible] மறந்த பலரை ஹரிஷீகேசம் தெய்வநெறிக் கழகம் நல்வழிக்குக் கொண்டு வருவது ஆச்சரியமான வேலை! தற்காலம் அது அவசியத்திலும் அவச்யம்! அதையும் தலைவரையும் நிந்திக்காமல் சிஷ்டர்கள் தம் வழியிலே வேலை செய்க!!

ஆயிரம் சொல் ஒன்றை எழுதாதே!! என்பது பழமொழி!! ஒன்றைக்கண்டித்தெழுதுபவர், நம்மிடம் அக்குற்றமில்லையா? இதனால் உண்டாகும் நன்மை தீமையைவிட அதிகமா? குறைவா? எத்தனை பேர் மநம் புண்ணாகும்! ஸாதுக்களுக்கு அபசாரமில்லாமலிருக்கிறதா? பத்ரிகையின் கொள்கைக்கு உவந்ததா? என்பது போன்றவைகளைக் கவனித்தல் மிக அவச்யம்!

நீங்கள் சரியான பிராமணரா? என்று திருவண்ணாமலை தர்ம கர்த்தா நம்மை அர்த்தமண்டபத்தில் நுழையாதே என்கிறார்! இதில் ஓரளவு நியாயமுண்டு! என்றாலும் ஆனை படுத்தால் ஆடு மட்டம், ஆடு படுத்தால்? என்ன என்பதை இவர் அறவேமறந்துவிட்டார். அநதிகாரிகளை தர்மகர்த்தாவாக நியமிப்பதின் பயனிது? பிராமணர் சீர்திருந்த வழி இது!! சிஷ்டர்களை உள்ளே விட்டு' அசிஷ்டர்களைத் தடுத்தலறிவுடமையாகும்!!

நல்ல பாடம்!! ஹைதராபாத் சட்டஸபை சாரதா சட்டத்தை நிராகரித்தது. மதாபிமானமுள்ள மஹம்மதியர் மதத்தில் சட்டம் தலை காட்டக் கூடாதென்றனர். காந்திஜி முதலியவர் மண்டையிலிது ஏறுமா?

இருவர் செயலும் தீதே!! சிதம்பரம் மாணவர் தேசியத்தில் மும்முறமாக தலையிடுவதும் போலீஸார் நிரபராதிகளான பலரை அடித்ததும் தலைவர் இவைகட்கு இடந்தந்ததும் தவறு. அடிக்கடி அங்கு ஏதேனும் இத்தகைய அல்லல் ஏற்பட, இடத்திலோ, திரவியத்திலோ வேறெதிலோ கெடுதலிருக்கவேண்டும்.

ஸமூஹத்திடமே விடுக!! வடகலை தென்கலை வழக்குகள் ரிலிஜஸ் எண்டோன்மெண்ட் போர்ட்டாராலேயே தீர்ப்பளிக்கப்படல் நலமென ஓர் நீதிபதி கூறுகிறார் இது மாத்ரமல்ல! விவாஹம்! ஆலயம்! ஜாதி! முதலிய ஸமூஹவிஷயத்தை அந்தந்த ஸமூஹப்பஞ்சாயத்தாரும் அதற்கு மேல் [illegible] அதற்கு மேல் கடைசியாக மடாதிபதிகள் பஞ்சாயத்தும் தீர்ப்பளிக்கும்படி ஏற்படுத்தல் நலம்!!

ஸ்ரீ குருபாதம் வாழி!! ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளது ஒவ்வோர் க்ஷணமும் ஒவ்வோர் செயலும் உலகம் போற்றத்தக்கவையா இருக்கின்றன. சென்றவாரம் திருப்பதிகலாசாலை தலைவருக்கு உபயமீமாம்ஸாப்ரவீண என்ற பட்டமளித்துகல்வித்துறையை விருத்தி செய்கிறார்கள்! இங்ஙனம் செலவில்லாதவைகளையேனும் இதர பீடாதிபதிகள் செய்து அந்தந்த மத பண்டிதர்களை உத்ஸாஹப்படுத்த திருவடிகளை வணங்கி வேண்டுகிறேன்.

தலைவரின் தளராமுயற்சி!! ஸ்ரீமான் நடேசய்யரவர்கள் அருணாசலத்தில் ஸபை நடத்திவிட்டு மதுரையில் பல இதர ஸபைகள் கூடும் போது தர்மப்ரசாரம் செய்ய தக்க முயற்சி செய்கிறார்கள்!! பண்டிதர்களும் ஆஸ்திகர்களும் ஒத்துழைக்க வேண்டுகிறேன்.

தலைவரழைப்பால் மதுரை பிரயாணம்!! சென்னையில் நடக்கும் ஸ்காந்த பாகவத பார்க்கவபுராணாதிகளை நிறுத்திவிட்டு ஸ்ரீ வத்ஸ. ஸோமதேவ சர்மா ஓர் வாரம் தர்மபிரசாரம் செய்து விட்டு ஜனவரியில் சென்னைவந்து கதைகளை ஆரம்பிப்பார்.

திருச்சி ஆயுர்வேத சபை

திருச்சி ஆயுர்வேத சபையின் 8-வது வருஷத்திய முதல் மாதாந்திரக் கூட்டம் 17—12—40 மாலை 3-30 மணிக்கு திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் கட்டிடத்தில் நடைபெற்றது. அந்த சமயம் ஸ்ரீமான் V. B. நடராஜ சாஸ்திரி தலைமை வஹித்தார். ஸ்ரீ S. R. வரதராஜுலு நாயுடு "கபவாதஜ்வரம்" என்பதைப்பற்றிப் பேசினார். பிறகு நடந்த சர்ச்சையில் எல்லோரும் கலந்துக் கொண்டார்கள்.

[illegible] பெரியோர்களுமாகிய இவர்களுடைய அகால மரணத்தைக் குறித்து ஓர் அனுதாப தீர்மானம் ஏக மனதுடன் தீர்மானிக்கப் பட்டது.

1. பழூர் ராமச்சந்திர அய்யர், ரிடயர் டிப்டி கலெக்டர்.
2. வரகூர் பாஷ்யபாவக்ஞ ஸ்மிருதி பூஷண ஸ்ரீ வெங்கட்டராம சாஸ்திரிகள்.
3. ஸ்ரீ ஸாலக் ராம சாஸ்திரி, லக்னௌ
4. ஸ்ரீ பஞ்சானன தர்க்க ரத்ந, காசி,

(ந-தி)

மேல் மங்கலம்

வர்ணாஸ்ரம ஸ்வராஜ்ய ஸங்கம்.

விக்ரம-ஹு கார்த்திகை-மீ 21-ம் தேதி முதல் மார்கழி-மீ 1-ம் தேதி முடிய 10 நாட்களிலும் காராகுருச்சி ஸ்ரீ லக்ஷ்மண சாஸ்திரிகள் அவர்களால் காலை $8\frac{1}{2}$ மணி முதல் 11-மணி வரை ஸ்ரீ ருத்ர பாஷ்யம் நடைபெற்று முடிவு எய்தியது.

அன்று இரவு 7-மணி முதல் $8\frac{1}{2}$ மணி வரை ஸ்ரீ விஸ்வநாதய்யர் அவர்கள் தலைமையில் பெரிய குளம் வ்யாகரண சிரோமணி ஸ்ரீ ராமஸ்வாமி சாஸ்திரிகள் அவர்கள் சநாதனதர்மம் என்னும் விஷயம் பற்றி அரிய உபன்யாசம் செய்தார்கள். சபைகாரியதர்சியால் வந்தனோபசாரம் சொல்லப்பட்டு சபை இனிது நிறைவெய்தியது.

சிவராம கணபதி கனபாடிகள்,
காரியதரிசி

ஸ்ரீ ஜகத் குரு ஸ்வாமிகளவர்களின் உபதேசம்.

நீடாமங்கலம் ஸ்ரீ சந்தானராமஸ்வாமி கோவிலில் ஸ்ரீ ஜகத்
குரு ஸ்வாமிகளவர்கள். 15-12-40 ஞாயிற்றுக்கிழமை இரவு
செய்த உபன்யாஸத்தின் ஸாரமாவது:—

இப்போது ஒன்றரை வருஷகாலமாக நமது ஜில்லாவில்
சுற்றி வருகிறேன். இதேமாதிரி எல்லா இடங்களிலும் கூட்ட
மாகவந்து தரிசிக்கிறார்கள். பக்தியாய் இருக்கிறார்கள். ஆதி
ஆசார்யாள் ஏற்படுத்தின ஸ்தானம் என்று ஜனங்களுக்கு
பக்தி. இப்போது ஸ்தானத்திலிருப்பவர் பெரியவர் என்பதற்
காகமட்டும் அல்ல. குருவாய் அடைவதற்கு வேறு பெரியோர்
களும் இருக்கிறார்கள். எல்லோருக்கும் உபதேசம் கொடுத்து
மோக்ஷம் அடையச்செய்வதற்காக மடம் ஏற்படவில்லை. அதற்கு
ஒரு மடம் வேண்டாம். அது தனித்தனியாக குருவிடம்
சிஷ்யன் அடைய வேண்டிய காரியம். பிரஜைகளுக்காக ராஜ்யம்
எப்படி ஏற்பட்டிருக்கிறதோ அந்த மாதிரி ஜனங்களுக்கு ஒருவித
உபகாரத்திற்காக மடம் ஏற்பட்டிருக்கிறது.

ஒவ்வொருவரும் நீங்கள் எனக்கு காணிக்கை கொடுக்
கிறீர்கள். எவ்வளவோ இடங்களில் மானியம் விட்டிருக்
கிறீர்கள். பணமும், திரவியமும் எவ்வளவோ சேர்ப்பிக்கிறீர்
கள். அவையெல்லாம் நான் பெற்றுக் கொள்ளுகிறேன்.
பார்த்தபோதெல்லாம் கும்பிடுகிறீர்கள். தெருவீதிகளில் நிறுத்தி
நமஸ்காரம் பண்ணுகிறீர்கள். இவையெல்லாம் எதற்காக?
கேட்டால், உங்களுக்கே பிரித்து காரணம் சொல்லத்தெரியாது.
தலைமுறை தலைமுறையாக இந்த பக்தி வந்திருக்கிறது. இந்த
மடத்தினால் ஜனங்களுக்கு ஒரு உபகாரம் இருக்கவேண்டும். அப்
படிப்பட்ட காரியம் இந்த மடம் என்ன செய்கிறது?

ராஜ்யத்தினால் ஜனங்களுக்கு உபகாரம் இருக்கிறது. நாம்
ஜீவித்திருக்க ஆஹாரம்வேண்டும். உடம்பை மறைக்க வஸ்திரம்
வேண்டும். மழை, வெயிலிலிருந்து காக்க ஒரு கூரை வேண்டும்.
நாம் சேகரிக்கும் சொத்தை ராஜ்யம் காப்பாற்றி கொடுக்
கிறது. துஷ்டர்களை தடை பண்ணுகிறது. இது தான் ராஜா
வின் வேலை. இந்த காரியம் செய்வதற்காகத்தான் நாம் வரி
கொடுக்கிறோம். அதை செய்யவில்லையென்றால் வரியும் கொடுக்க
வேண்டியதில்லை. யாராயிருந்தாலும், தன் காரியத்தைச் செய்ய
வேண்டும். இல்லாவிட்டால் ஜீவித்திருக்க முடியாது. ரஸ்தாக்
களில் போல் கேட் கட்டிடங்கள் இடிந்து கொண்டிருக்கிற
தைப் பார்க்கிறோம். ஏன்? அவைகளுக்கு உபயோகம் இல்லை.
மடம் செய்கிற காரியம் ஒன்று இல்லாவிட்டால், அது இருப்
பதற்கு அர்த்தம் இல்லை.

மடம் ஜனங்களுக்கு என்ன உபகாரம் பண்ணுகிறது?
உங்கள் நமஸ்காரங்களை பெறுகிற நான் இதற்கு என்ன பிரதி
செய்கிறேன்? இந்த தோற்றம் உண்டாகி இப்போது சில
காரியங்களை செய்து கொண்டிருக்கிறேன்.

ஜனங்கள் க்ஷேமப்பட அவர்கள் நல்ல நடக்கையில்
இருக்க வேண்டும்- நல்லது எது கெட்டது எது என்று அவர்
களுக்கு தெரியவேண்டும். நல்லது பொல்லாததை ஜனங்
களுக்கு சொல்லவேண்டியது மடத்தின் கார்யம்- இதை சொல்
வதற்கு மடத்துக்குத்தான் பாத்யம். அது சொல்லவேண்டு
மென்று கேட்க ஜனங்களுக்கும் பாத்தியம்.

முன்னாளில் ஜனங்கள் நடக்கை அதிகம் கெட்டுப்போயி
ருக்கவில்லை. இப்போதுமாதிரி அவ்வளவு பொய்கள் கிடையாது.
கிராமங்களில் ஜாதி பஞ்சாயத்துகள் இருந்தன. பெரியதனக்
காரன் சொற்படி நடந்தார்கள். வழக்கு வியவகாரங்கள் வளரா
மல் இருந்தன. ஊருக்குள்ளேயே வழக்கு தீர்ந்தால், ரொம்ப
மாற்றி பொய்கள் சொல்லமுடியாது.

இந்த நாளில், வழக்கு ஒரு ஊரில்; விசாரிக்கிறது எட்டி
மற்றொரு ஊரில். நிஜம் ஜெயிப்பதற்குகூட பொய் சொல்லவேண்
டியிருக்கிறது. இரண்டு குடியும் கெட்டு சொத்தெல்லாம் தோத்த
பின் மூன்று கோர்ட்டு தாண்டி யாரோ ஒரு வெள்ளைக்காரன்
எழுதுகிறதை ஒத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஊரிலேயே
பஞ்சாயத்து பண்ணினால், இப்போது கோர்ட்டு தீர்ப்புகளைக்
காட்டிலும் அதிகமாக தப்பு தீர்ப்புகள் உண்டாகிவிடாது. ஜன
நாயகம் ஏற்பட வேண்டுமென்று பாடுபடுகிறார்கள். இப்போ
துள்ள ஜனநாயக முறையில் பொய்கள், லஞ்சம் முதலியவை
குறையவில்லை. முன்னே ஒரு அதிகாரிக்கு லஞ்சம் கொடுத்தால்
இப்போது பலபேருக்கு கொடுக்க வேண்டியிருக்கிறது. சில
காரியங்களில் நிஜத்தைச் சொல்லுவதே அசாத்யமாகிவிடுகிறது.
எலெக்ஷன்களில் பணம் கொடுக்கிறவர், வாங்குகிறவர் இரண்டு
பேரும் உண்மையைச் சொல்ல முடிகிறதில்லை. முன் காலத்தில்
நமது தேசத்தில் பஞ்சாயத்தார்களை ஜனங்கள் தான் தேர்ந்தெடுத்
தார்கள். ஆனால் இப்போது மாதிரி யாரை வேண்டுமானாலும்
தேர்ந்தெடுக்கலாம் என்றில்லை, குலம், கல்வி, நடத்தை, வயது
உள்ளவர்களைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும். உத்தரமேரூர்
கல்வெட்டு சாஸனத்திலும், சந்த்ர லேகா சதுர் வேதமங்கலம்
[illegible] விஷயங்கள் இருக்கின்றன.

கிராம பொது காரியங்கள் பஞ்சாயத்து பொறுப்பில்
நடந்தபோது ராஜாங்கத்துக்கு அதிக வேலையில்லை. ஆகை
யால் இப்போதைப்போல கிராமத்தார் அதிக வரியும் கொடுக்க
வேண்டியிருக்கவில்லை. ஜனங்களை ஸன்மார்க்கத்திலிருக்கும்படி
செய்ய வேண்டியதும் ராஜாவின் காரியம்தான். அதனால்
தான் சுக வாழ்க்கை உண்டாகும். வேறே எத்தனை நன்மை
கள் செய்தாலும், திருப்தியுடன் கூடின சுகம் ஏற்படாது.
ஜனங்களின் லௌகிக க்ஷேமத்துக்காகப் பலகாரியங்கள்
செய்கிறார்கள், கல்வி கொடுப்பதற்காக பள்ளிக்கூடங்கள்
வைத்திருக்கிறார்கள். வியாதிகள் சமனத்துக்காக ஆஸ்பத்தி
ரிகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். தாரித்ரிய நிவிருத்திக்காக
கொவாபரேடிவ் ஸங்கங்கள் அமைக்கிறார்கள். இதெல்லாம்செய்
வதோடு வேறொன்றும் செய்யவேண்டும். ஜனங்களின் மன
தில் ஸமாதானம் வேண்டும். மனஸ் திருப்தி இல்லாவிட்டால்
சுகம் கிடையாது. ஒரு ஏழை வைத்திருப்பது எல்லாம் போனா
லும் "ஆண்டவன் செயல்" என்று சொல்லிக்கொண்டு சமா
தானம் அடைகிறான். ஒரு லக்ஷம் ரூபாய் உடையவனுக்கு, இரு
பது ரூபாய் நஷ்டமாய் விட்டால், சகிக்கமாட்டாமல் மண்
டையில் கூட அடித்துக் கொள்வதைப் பார்க்கிறோம். உடைமை,
பொருள், ரொம்ப இருந்தால் சுகம் வந்து விடும் என்பதில்லை.
மனஸின் மூலம் சுகம் வரவேண்டும். ஜனங்களின் மனஸு
நல் வழியில் இருக்கவேண்டும். இதுதான் முக்கிய காரியம்.
ஜனங்கள் சுகம் அடைவதற்கு ஸ்வராஜ்யம் கிடைக்கப் பாடுபடு
கிறார்கள். ஸ்வராஜ்யம் கிடைத்தாலும், சண்டை, கலகம்
குறையா விட்டால், க்ஷேமம் உண்டாகாது. நமது தேசம் பலம்
அடைந்து விட்டால் மாத்திரம் போதாது. முதலில் சரியா
யிருப்பவர்கள் கூட, வலிமை கிடைத்தவுடன் அநியாயம்
செய்கிறார்கள். ருஷியாவைத் தோற்கடித்த போது நாம்
எல்லோரும் ஜப்பானை மெச்சினோம். இப்போது அது சைனாவு
டன் யுத்தம் பண்ணுவதற்காகக் கண்டிக்கிறோம். மனஸில்
திருப்தி உண்டாகி, நடக்கை நல்வழிப்படாத வரையில், சண்டை
யும் கஷ்டமும் தான் உண்டாகும். ஜஸ்டிஸ் கட்சி செய்த காரி
யங்களை காங்கிரஸ் மந்திரிகள் மாற்றினார்கள். காங்கிரஸ்காரர்
செய்ததை பின்வந்த சர்க்கார் மாற்றுகிறார்கள். ராஜீயக்
கிளர்ச்சிகளால் மட்டில் ஜனங்களுக்கு சுகம் வராது.

மனஸு திருப்தி அடைய வேண்டுமானால், அது ஒரு இடத்
தில் ஈடுபட வேண்டும். அப்படி ஈடுபடுவதுதான் பக்தி. இதற்
காகத்தான் ஆலயங்கள் கட்டியிருக்கிறார்கள். ஆலயத்திலுள்ள
சிலையை வா என்கிறோம். எல்லா இடத்திலும் ஸ்வாமி இல்லை
யா, ஆலயத்தில் தானா இருக்கிறார், என்று கேட்கலாம். எல்லா
இடத்திலும் இருக்கிறார், வாஸ்தவம். எல்லா இடத்திலும்
ஸ்வாமி இருக்கிறார் என்று தெரிந்து கொண்ட பேர்களுக்கு
ஆலயம் வேண்டியதில்லை. அப்போது ஆலயப் பிரவேசம்
வேண்டுவதற்கு அவசியம் இல்லை.

வீதியிலும் கற்கள் இருக்கின்றன. கோவில் வாசற்படி
யும் கல்தான். அவைகளை விட்டு, உள்ளே யிருக்கிறதை ஸ்வாமி
என்றுசொல்லுகிறோம். எல்லாக்கல்லும் ஸ்வாமியாகத்தோன்றுகி
றபோது, ஆலயத்திலுள்ள ஸ்வாமி வேண்டியதில்லை. அதுவரை
யில் ஆலயத்தில் ஸ்வாமி உண்டு. பக்தியாலும் ஞானத்தாலும்,
எல்லா இடத்திலும் ஸ்வாமியைப்பார்க்கும் நிலைமை உண்டாகும்.
எல்லாம் பகவான் என்று உணர்ச்சி உண்டாக, ஆல
யத்தில் உள்ள ஸ்வாமியிடம் ஈடுபடவேண்டும். அப்படி ஈடு
படுவது லேசானதல்ல. ஒரு கோபுரம் கட்டுவதற்கு எவ்வளவு
முயற்சி வேண்டும்? ஒரு கோவிலைக் கட்டி முடிக்க, மனதில்
எவ்வளவு பிடிவாதம் வேண்டும்? அப்படி ஒரே முகமாக பிடி
வாதம் வைத்து காரியம் செய்தால் மனஸு பரிபாகமடையும்.
இதற்காகத்தான் சித்தசுத்தி உண்டாவதற்கு, கர்மாக்கள் பண்ண
வேண்டும் என்கிறார்கள். பகவான் எங்கேயும் இருக்கிறார்
என்று நமது புஸ்தகங்கள் தான் சொல்லுகின்றன. மற்ற மதஸ்
தர் போல, பிரபஞ்சத்துக்கு வெளியே இருக்கும் ஒரு கடவுள்
எல்லாவற்றையும் ஆட்சி செய்கிறார் என்று நாம் சொல்ல
வில்லை.

நாம் பார்க்கிறதெல்லாம் பிரம்மம். நாமெல்லாம் பிரம்மம்
என்பது நமது மதத்தில் தான் உண்டு. இந்த தத்வத்தை உபதே
சித்த பெரியவர்களே எங்கு பார்த்தாலும் ஆலயங்களையும் கட்டி
வைத்திருக்கிறார்கள். ஆலயங்களில் வழிபடும்படி அவர்கள்
தான் உபதேசித்திருக்கிறார்கள். எல்லா இடத்திலும் பகவான்
இருந்தாலும், ஆலயத்திலுள்ள மூர்த்தியில் அதிக ஸாந்நித்யத்
துடன் இருக்கிறார். சூரியனின் பிரகாசம் எங்கும் இருக்கிறது.
அதன் கிரணங்களை ஒரு லென்ஸ் கண்ணாடி மூலம் ஒரு புள்ளி
யில் சேர்த்தால், பிரகாசமும் உஷ்ணமும் பல மடங்கு ஆகிறது.
அதுமாதிரி, மந்தரங்களினால் ஆலய மூர்த்திகளில் ஸாந்நித்யம்
உண்டாகிறது. அதை ரக்ஷிக்க ஏற்பட்ட விதிகளின்படி நடக்க
வேண்டும்.

ஆலயரக்ஷணமென்ன, இது மாதிரி நன்னடக்கைக்காகிய
மற்ற விஷயங்களென்ன, இவைகளைப்பற்றி ஜனங்களுக்குத் தெரி
விக்கவேண்டியது மடத்தின் காரியம்.

சாந்த ரஸம்

[மஹாமஹோபாத்யாய ராயம்பேட்டை கிருஷ்ணமாசாரியார்]

நமது பாரத நாட்டில் ஒவ்வொரு வித்யையும், ஒரு தெய்வ மூலமாக வெளியாகி பிறகு ஒரு அல்லது சில அல்லது பல ரிஷிகளால் விஸ்தரிக்கப்பட்டுக் கிரந்த ரூபமாக பிரகாசத்தைப் பெற்றுச் சிஷ்யபரம்பரை வழியாக நமக்குக் கிடைத்து வந்திருக்கின்றது.

இந்த ரீதியிலேயே நம் நாட்டிய வித்யையும், பரமசிவன் பிரம்மா தண்டு நந்தி பரத மஹர்ஷி ஆகிய இவர்கள் மூலம் நமக்குக் கிடைத்திருக்கின்றது.

எல்லா வருணத்தாரும் கையாளுவதற்காகவே பிரம்மா நாட்டிய வேதம் என்கிற இந்த ஐந்தாம் வேதத்தை வெளியிட்டதாகக் கூறப்படுகிறது.

தக்காலம் பிரசாரத்திலிருக்கும் பரத நாட்ய சாஸ்த்ரம் என்ற கிரந்தம் தான், நாட்டிய வித்யையைப் பற்றி எழுதிய புஸ்தகங்களுக்குள் முதல் நூல் என்று கருதி வருகிறோம்.

37, (38) அத்யாயங்களுள்ள இந்த நாட்டிய சாஸ்திரத்தில் நாட்டிய சாலை கட்டவேண்டிய முறை முதல் பல விஷயங்களும் தெளிவாக தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. இதில் 6, 7, அத்யாயங்களில் ரஸத்தைப்பற்றிய வெகு விஷயங்கள் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன:— ரஸம் என்றால் என்ன? அது எவ்வாறு உண்டாகின்றது? எவ்விதம் வளருகிறது? எப்படி அறிந்து அநுபவிக்கப்படுகின்றது? அது எவ்வளவு? இவை போன்ற விஷயங்கள் இந்த இரு அத்யாயங்களிலும் அழகாகவும் சுருக்கமாகவும் சொல்லப்பட்டிருக்கின்றன இந்தநூலைப்பின்பற்றியே பலமேதாவிகளும் ஆழ்ந்து ஆராய்ந்து அனேகம் ரஸக்கிரந்தங்களைச் செய்திருக்கிறார்கள். எந்த சாஸ்திரத்திலும், யாவராலும் பிரமாணமாக ஒப்புக் கொள்ளப்பட்ட மூலக்கிரந்தங்களுக்குப் பின்புள்ளார் தம்தம் புத்திக்கு எட்டிய வரை யுக்தி பிரமாணங்களை அநுஸரித்து எழுதிய வியாக்யானங்கள் மூலமாகப் பல பல கொள்கைகள் ஏற்பட்டிருக்கும் மாதிரி இந்த ரஸவிஷயத்திலும் பல கொள்கைகள் வந்திருக்கின்றன.

நாட்டிய சாஸ்திரத்தில் அவரவர்க்குக் கிடைத்த பாடபேதங்களாலும் 'இது தான் நாட்டிய சாஸ்திரத்தின் கருத்து' என்று பல ஆசிரியர்கள் தங்களுடைய புத்திக் கூர்மையால் எழுதிய வியாக்கியான பேதங்களாலும், வெகுகாலமாகவே சாந்தரஸத்தைப் பற்றிய பெரிய விவாதம், ரஸக்கிரந்தங்களிலும், அலங்காரக் கிரந்தங்களிலுள்ள ரஸப்ரகரணங்களிலும் காணக்கிடக்கின்றது. பக்திரஸம் வாத்ஸல்யரஸம் ப்ரேமரஸம் போன்ற வேறு சில ரஸங்களை அதிகமாகச் சிலர் கூறியிருப்பினும், அவ்விஷயத்தில் நம் ஆலங்காரிகாகள், சாந்தரஸத்தில் காட்டிய விவாத கோலாஹலத்தைக் காட்டவில்லை.

சாந்தரஸ ஸம்பந்தமுள்ள விமர்சனத்துக்குரியன அடியில் காணும் விஷயங்கள்—சாந்தரஸம் என்றொரு ரஸம்உண்டா? சாந்தரஸத்துக்கு எது ஸ்தாயி பாவம்? இந்த ரஸத்தையும் இதற்குள்ள ஸ்தாயிபாவத்தையும் பரதர் நாட்டிய சாஸ்திரத்தில் கூறியிருக்கிறாரா? அப்படியே சாந்தரஸம் ஸித்தித்தாலும், இது காவ்யத்துக்கு மாத்திரமா? நாட்டியத்துக்கு முண்டா? நாட்டியத்துக்கு இல்லை என்றால் காரணம் என்ன? இந்த ரஸம் வேறு ரஸத்தில் அடங்கி விடாதா? இது தனியான ரஸம் என்றாலும் இது நாடகாதிகளில் ப்ரதானரஸமாயிருக்க முடியுமா? இவைகளே முக்கிய மாக ஆராயப்பட வேண்டியவை.

நமது பூர்விக மேதாவிகள் விவாதத்துக்குரிய ஒரு விஷயத்தை எடுத்துக்கொண்டு ஆராயப் புகுந்தால், எதிர்க்கொள்கைகளுக்குள்ள ஸாதக பாதகங்களை நிஷ்பக்ஷபாதமாக ஆர அமர அலசிப்பார்த்து விட்டுப் பிறகுதான் தமது கொள்கையை யுக்திப்ரமாணங்களைக் கொண்டு ஸ்தாபிக்க முயலுவது வழக்கம். இதே மாதிரி சாந்தரஸ விஷயத்திலும் நம் ஆலங்காரிக மேதாவிகள் ஆராய்ச்சியை நடத்தியிருக்கிறார்கள்.

(தொடரும்)

வான்மீகரும் தமிழும்

(மதுரை, பண்டிட் நாராயணய்யங்கார் எழுதியது)

(12-12-40 வாரத்தொடர்ச்சி)

ஸுந்தரம், கவி, போன்ற பல ஸம்ஸ்கிருதச் சொற்கள் தமிழில் தர்ம வாசகங்களாகப் பிரயோகிக்கப்பட்டு அவை குற்றமற்றவையெனத் தமிழர்கள் அங்கீகரித்தபோதிலும் ஸம்ஸ்கிருத நூல்களில் அச்சொற்கள் தர்ம பரங்களாகவே பிரயோகிக்கப்படில் இலக்கணப் பிழை யுள்ளவைகளாகவே கருதப்படுகின்றன, ராமாயணத்திலும் மற்ற எந்த கிரந்தத்திலும் இவை போன்ற பதங்கள் தர்மபரங்களாகப் பிரயோகப்பட்டிருப்பதாக ஒரு உதாஹரணம் கூட காட்டமுடியாது. ஸம்ஸ்கிருதத்தில் தர்மி வாசக பதங்கள் தர்ம விசிஷ்டமான தர்மியை உணர்த்துமேயன்றி தர்மத்தை மாத்திரம் போதித்து அதோடு நின்று விடுவதில்லை. ஆகவே ஸுந்தரபதம் சௌந்தர்யவிசிஷ்டமான ஓர் வஸ்துவை போதிக்குமேயன்றி சௌந்தர்யத்தை மாத்திரம் போதித்து அதோடு பூர்த்தியையடையாது. 'ஊர் அடங்கிற்று'' என்றபிரயோகத்தில் ஊர் என்பது லக்ஷணையால் ஊரிலுள்ள ஜனங்களைக் குறிப்பது போல ஸுந்தரம் என்ற பதம் சௌந்தர்யத்தைச் சொல்லமாட்டாது. இவ்விதப்பிரயோகங்கள் இலக்கணப்பிழையுள்ளவைகளாகும். ப்ரகிருதி ப்ரத்யயார்த்தங்களை போதிக்கும் சப்த சாஸ்திரத்திற்கு விருத்தமாக லக்ஷணையால் ஓர் அர்த்தத்தை பெற விரும்புவது ஸம்ஸ்கிருத பாஷையின் இயல்பு ஆகா. ஆகவே தமிழ் வழக்கை ஸம்ஸ்கிருதத்தில் ஏறிடுவதற்காக இலக்கணவிருத்தமாக வால்மீகி ஸுந்தர பதத்தை தர்மபரமாகப் பிரயோகித்தார் என்பது பொருத்தமற்றது.

அஹிரேவ ஹ்யஹே: பாதான் விஜாநாதி'' என்ற ராமாயண வாக்யமும் "பாம்பின் கால் பாம்பறியும்'' என்ற தமிழ் பழமொழியின் மொழி பெயர்ப்பு என்பதும் சரியல்ல. வால்மீகிக்கு முந்தின காலத்திலோ அல்லது ஸம காலத்திலோ இப்பழமொழிஉலக வழக்கத்திலிருந்ததென்பதற்கு ருசுவில்லை. ஸம்ஸ்கிருத பழமொழியிலிருந்தே இத்தமிழ் பழமொழி பிறந்ததெனச்சொன்னால் அதை ஆக்ஷேபிக்க வழியில்லை. ராமாயண காலத்தில் அல்லது ராமன் காலத்தில் ஸம்ஸ்கிருதம் தான் உலக பாஷை அதாவது மனிதர்கள் பேசி வந்த பாஷையாகும். வானரர்கள் பேசி வந்த பாஷைதமிழ்பாஷையாகவுமிருந்ததென்பது அடுத்தவியாஸத்தில் விஸ்தாரமாகநிரூபிக்கப்படும்.

ஆஞ்சனேயர் சீதையுடன் தனித்துப் பேசி தான் வந்த காரியத்தை முடித்துக் கொண்டு பிறகு அசோகவனத்தை அழிக்க அதைப்பார்த்த அரக்கிகளுக்கு "சகாரஸுமஹத் ரூபம் ராக்ஷஸீநாம் பயாவஹம்'' என்று எல்லோரும் பயப்படும்படி தன் பெரிய உருவத்தைக்காட்ட "தருஸ்தம் கிரிஸங்காசம் அதிகாயம் மஹாபலம் ராக்ஷஸ்யோ வாநரம் த்ருஷ்ட்வா பப்ரச்சுர் ஜநகாத்மஜாம்'' என்று பெரிய பர்வதம் போல பயங்கர உருவங்கொண்ட ஆஞ்ஜனேயரைக் கண்டு பிறகு சீதையையணுகி அம்மா— கோயம்— இவன் யார், கஸ்ய— யாரைச்சேர்ந்தவன், குதோவாயம்— எங்கிருந்து வந்திருக்கின்றான், கிம் நிமித்தம் இஹ ஆகத:= எதற்காக (என்ன காரியமாக) இவ்விடம் லங்கைக்கு வந்திருக்கிறான், ஸம்வாத மஸிதாபாங்கே கிம் த்வயா க்ருதவாநயம்= இவன் உன்னோடு என்ன பேசிக்கொண்டிருந்தான், என்று இவ்விதம் ஐந்து கேழ்விகள் கேழ்க்க அவைகளுக்கு ஸீதையால் 'ராக்ஷஸர்களையறிய எனக்கு வழியேது. இவன்யார் என்பதும் என்ன செய்வான் என்பதும் உங்களுக்குத்தான் தெரியும். பாம்பின் கால்களைப் பாம்பு தானேயறியும். இவனைக்கண்டு நானும் அஞ்சுகிறேன். இவன் அரக்கனென்றே நினைக்கிறேன்' பல எனப்பதில் கூறப்பட்டது. தங்கள் முன்னிற்கும் மாலைபோன்ற பொருள் வாநரமென்பது அரக்கிகள் அறிந்ததே. அறிந்தும் இவன் யார் என்ற கேழ்விக்கு அவன் ஊர், பெயர், குலம், முதலியவைகளையறிய வேண்டுமென்பதே நோக்கம் இக்கேழ்விக்கு "நைநம் ஜாநாமி கோந்வயம்'' என்று இவன் ஊர், பெயர், முதலியன எனக்கும் தெரியாது. உங்களுக்குத்தான் அவை தெரியும், வேத்மி ராக்ஷஸமேவைநம் காமரூபிணமாகதம்— இவனைப்போதுவாக அரக்கனே என்று அறிகிறேன் என்றும், பிறகு அவன் என்ன செய்யப்போகிறான் என்ற கேழ்விக்கு "அது உங்களுக்குத்தான் தெரியும்'' என்றும் பதில் சொல்லி இவ்வர்த்தங்கள் அஹிரேவ என்ற பழமொழியால் நிகமிக்கப்படுகின்றது. இப்பழமொழியின் பொருளும் "ரக்ஷஸாம் பீமரூபாணாம் விஜ்ஞாநே மமகாகதி. யூயமேவாபிஜாநீத யோயம் யத்வா கரிஷ்யதி'' ஒன்ற முன் சுலோகத்தில் விளக்கப்பட்டிருக்கின்றது. பயங்கர உருவமுள்ள அரக்கர்களுடைய ஊர், பெயர், முதலியவைகளையறிய எனக்கு வழியேது அவ்விஷயங்கள் உங்களுக்குத்தான் தெரியும் என்பது வசனத்தின் பொருள் அதாவது என்னைப்போன்றவர்கள் (அரக்கர்களின் பரிசயமற்ற வேறு இனத்தைச்சேர்ந்தவர்கள்) இவனைப் பொதுவாக அரக்கனென்று தான் அறிய முடியும் இவனைப்பற்றிய விசேஷங்களையறியமுடியாது. பாம்பைப்பார்த்தவர்கள் பாம்பு என்று அறிவார்கள். அதன் விசேஷமான கால்கள் புலப்படாது. ஆனால் அதன் இனத்தைச்சேர்ந்த மற்றொரு பாம்பு அதன் கால்களை அறியும். அவ்விதமே இந்த அரக்கன் இனத்தைச் சேர்ந்த நீங்கள் இவன் விசேஷத்தை அறிவீர்கள் என்பது நிரந்த பொருள். பாம்புக்குக் கால்கள் பல உண்டென்பதும் அவைமிகவும் சூக்ஷ்மமானவையென்பதும் ஆகவே, கூடபாத், என்பது அதற்குப் பொருத்தமான பெயரென்பதும் பிரசித்தம், கூட, என்ற ஸம்ஸ்கிருத பதம் அபாவத்தை ஒரு நாளும் பொருளாகக் கொள்ளாது என்பது ஸம்ஸ்கிருதத்தில் பரிசயமுள்ளவர் அறிவர். பாம்புக்குக்கால்கள் உண்டென்பதை ஆங்கிலத்தில் Zoology படித்தவர்களிடமும் கேட்டுத்தெரிந்துக்கொள்ளலாம். அஹி என்ற ஏகவசனம்

(தொடர்ச்சி 5ம் பக்கம் பார்க்க)

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
விக்ரம-௵ மார்கழி-௴ 12௳

தேவாலய பூஜை நிலைமையும் டிரஸ்டிகளின் கடமையும்.

தேவாலயங்களில் நடைபெறும் பூஜைகளை சாஸ்திர விதிப்படி நடத்தவேண்டுமென்பதில் ஹிந்துமதஸ்தாபன போர்டார் [illegible] எடுத்துக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. தஞ்சை ஜில்லாவிலுள்ள அனேக கோவில்களுக்கு போர்டார் அனுப்பியுள்ள சுற்றுக் கடிதத்தில் அந்தந்தக் கோவில்களில் நடைபெறும் பூஜை கிரமத்தையும், அதற்கு ஆதாரமான ஆகம ஸம்ஹிதை, பிரயோகம், முதலியவைகளைப் பற்றியும் பூஜகர்களின் நிலைமையைப்பற்றியும் அறிவிக்கும்படி கேட்கப்பட்டிருக்கிறது.

மேலும் மைலத்தில், மதஸ்தாபன போர்டுத் தலைவர் திவான் பஹதூர் ஸ்ரீ நாராயணஸ்வாமிப்பிள்ளை அவர்கள் தலைமையில் நடந்த ஒரு ஆலோசனைக்கூட்டத்தில் வேதாகம விதிப்படி ஆலய பூஜைகள் ஒழுங்காக நடைபெற என்னசெய்யவேண்டுமென்பதைப்பற்றியும் யோஜிக்கப்பட்டதாகத் தெரிகிறது. தற்காலத் தலைவரான ஸ்ரீ நாராயணஸ்வாமி பிள்ளையவர்கள் சில நாட்களாக இவ்விஷயத்தில் தீவ்ர முயற்சி எடுத்துக் கொண்டிருப்பதாக அறிகிறோம். தற்காலம் தேவாலயங்களில் சாஸ்திர ஸம்பிரதாய முறையின்றி ஏதோ பூஜகர் இஷ்டப்படி நடக்கும் பூஜையின் அலங்கோலத்தைக் கவனித்து வருந்தி நிற்கும் ஆஸ்திக ஸமூஹத்தினருக்கு இது சிறிது ஆறுதலைக் கொடுக்கக் கூடியது.

தேவாலயங்களில் டிரஸ்டிகளாயிருப்பவர்கள், பண வரவு செலவுகளையும், சில மாமூல் காரியங்களையும் கவனிப்பதோடு தங்கள் கடமை முடிந்துவிட்டதாக நினைத்து விடுகிறார்கள். உண்மையில் மற்ற எல்லாவற்றையும் விட ஆலய பூஜை விதிப்படி நடக்கிறதாவென்பதைக் கவனிப்பதே டிரஸ்டிகளின் முதற்கடமையாக நிற்கிறது. சிலைகளிலும், உலோஹங்களிலும் நாம் மிகுந்த பக்தியுடன் தேவதாபுத்தி செய்வதற்கு, மந்திர சக்தியும், விதிப்படியான பூஜையும் அதனடியாக ஏற்படுவதாகச் சொல்லப்படும் தெய்வ ஸாந்நித்யமுமே காரணமென்பதை மறுப்பாரில்லை. ஸரியாக பூஜை நடக்காவிடில் அந்த பிம்பத்தில் தேவதா சக்தி குறையாதா.

பிர்மாண்டமான கோவில் கட்டிடத்தையும். பகட்டான ஆடம்பர உத்ஸவங்களையும் வைத்துக்கொண்டு தேவதா சக்தியில்லாத வெறும் பிம்பங்களை கொண்டாடுவதால். இஹபரசாதக மான பயனென்ன?

அநேக கோவில்களில் பூஜகர்களுக்கு பொதுப்படிப்பு, ஆகமஞானம், ஸதாசாரம் முதலிய ஒன்றிலாவது திருப்தியளிக்கக் கூடிய நிலைமை இல்லை! பொறுப்புள்ளதும், ஜவாப்தாரிகரமானதுமான பூஜக வேலையில் அமர்ந்துள்ளவர்களுக்கு நல்லொழுக்கம், படிப்பு முதலியவைகளுடன் பூஜாவிதிகளும் நன்கு தெரிந்திருக்கவேண்டியது அவச்யமென்று நிர்ப்பந்திக்கப் பொது ஜனங்களுக்கு உரிமையுண்டு. ஸம்ஸ்கிருத அக்ஷரங்கள் தெரிந்தவர்கள் கூட வெகு சிலரே இருப்பார்கள். ஆகம பூஜை முறையை சிலர்கள் ஸ்வப்னத்திலும் அப்யஸித்தவர்களல்ல. கம்பீரமான பெரிய ஸமுத்ரம் போன்ற ஆகமங்களில் மந்திர தந்திரங்களையும், ஊஹாபோஹங்களையும், சாஸ்திரீயமாக எழக்கூடிய பற்பல ஸந்தேஹ விபர்யயாதி சர்ச்சைகளையும் தற்கால பூஜகர்கள் பெரும்பாலோர் அறியக்கூடிய அர்ஹதையில்லாதவர்களே.

இவ்விஷயத்தில் பூஜகர் மீது நாம் குற்றம் சொல்ல முடியாது. குடும்ப ஜீவனத்தைக் கருதி அவர்கள் அரிச்சுவடிகூட அப்யஸியாமல் பிறந்தவுடனேயே கோவில்களை நோக்கிப் போகவேண்டியிருக்கிறது. கோவில் டிரஸ்டிகள் இந்த முக்ய விஷயத்தில் என்ன கவனம் செலுத்துகிறார்கள்? பூஜகர்கள் ஸரியான காலத்திலும், ஸரியான விதிப்படியும் பூஜை நடத்துகிறார்களா வென்பதை டிரஸ்டிகள் ஏன் கவனிக்கலாகாது. மைஸூர் பரோடா முதலிய பல இடங்களில் போல் ஆகம பாடசாலைகளை வைத்து பூஜகர்களைப் பயிற்சி செய்வித்து அதில் தேறியவர்களையே பூஜைக்கு அநுமதிக்க வேணும். தெரியாதவர்களையும், ஸன்மார்க்கம் தவறியவர்களையும் கண்டிப்பாக விலக்க வேண்டும். இப்படிச் செய்தால்தான் அவர்கள் சீர்திருந்துவார்கள். இப்போதுள்ள சட்டப்படி டிரஸ்டிகளுக்கு பூஜகர்கள் மீது ஆதிக்யம் செலுத்தப் பூர்ணமாக அதிகாரமிருப்பதாகத் தெரிகிறது. மேலும் போர்டாரும், கோர்டார்களும், பொது ஜனங்களும் பூஜகர்கள் கற்றறிந்தவர்களாயிருக்க வேண்டுமென்பதில் தீவ்ர சிரத்தையுள்ளவர்களாயிருப்பதால் டிரஸ்டி களுக்குப்பின் பலமும் இருக்கிறது. ஆகையால் அர்ஹதையற்றவர்களை சீர்திருத்தவும் பூஜை விதிகளை ஸரியாக நடத்தும்படி மேற்பார்வையிடவும் டிரஸ்டிகள் சிரத்தை எடுத்துக் கொள்ளாத வரையில் தைவ ஸாந்நித்தையும் மஹிமையையும் நாம் காப்பாற்ற முடியாது.

அங்காங்குள்ள தேவஸ்தானக்கமிட்டிகளும் டிரஸ்டிகளுக்கு அதிகாரம் கொடுத்து தெய்வ பூஜையை நன்கு நடத்த வழி தேடவேணும். தாக்ஷிண்யங்களுக்கும், சிபார்சுகளுக்கும் இணங்கி விடாமல் தெய்வ கார்யத்தில் தாங்கள் ஸம்பந்தப்பட்டிருக்கிற பொறுப்பை உணர்ந்து நடந்துக் கொள்ளவேண்டியது அவசியம். மதஸ்தாபன போர்டாரே இதில் நடவடிக்கை எடுக்க முன் வந்திருக்குமிச் சமயத்தில் கமிட்டிகளும், டிரஸ்டிகளும் இந்த சீர்திருத்தத்தை தைர்யத்துடன் செய்து முடிக்க வேணும். இதொரு நல்ல ஸந்தர்ப்பம். பூஜகர்களும் பொது ஜனங்களிடையிலும் அதிகாரிகளிடையிலும் விழிப்பு ஏற்பட்டு விட்டதையும், பழைய காலம் மறைந்து விட்டதையும் அறிந்து தங்கள் கடமையை ஒழுங்காகச் செய்ய முன்வருவது அறிவுடமையாகும். போர்டுத்தலைவர் இவ்விஷயமாக மேல்மேலும் சிறிதும் தாமஸமின்றி நடவடிக்கை எடுப்பதை ஆஸ்திகஸமூஹம் ஆவலுடன் எதிர்ப்பார்க்கிறது.

ஸநாதன தலைவர்களுக்கு விக்ஞாபனம்.

ஸ்ரீமான்களான எனது அன்பில்சிறந்த தலைவர்களே!

இதுசம்யம் நமது தலைவர்களிடையில் ஹிந்து மகா சபையில் சேருவதைப் பற்றி அபிப்பிராயமிருந்து வருவதாகவும் விசேஷமாக கல்கத்தா மஹாமஹோபாத்யாய ப்ரும்மஸ்ரீ அனந்தகிருஷ்ண சாஸ்திரிகள் அவர்களுக்கு அதிக ஆவல் இருப்பதாகவும் தெரிகிறது. அது வாஸ்தவமே. எனினும் அது சம்மந்தமான எனது சிற்றறிவுக்கு எட்டிய அபிப்பிராயங்களை வெளியிடுகிறேன். நாம் வேத சாஸ்திரங்களின் முறைப்படி செய்து வரும் சுத்தி முறைக்கும் ஹிந்து மஹா சபையால் செய்துவரும் சுத்தி முறைக்கும் வித்யாஸமுண்டு என்பதை ஆழ்ந்து கவனிக்கவேண்டும்.

1935ம் வருஷத்தில் கயா கோவில் விஷயமாக தகரார் ஏற்பட்ட காலத்தில் புத்தர்களுக்கு சாதகம் செய்ய ஹிந்துமஹா சபையார் பிரயத்தனம் செய்தார்கள்.

திருவாங்கூர் ஆலயப்பிரவேச சாசனத்தை ஆமோதித்து ஹிந்து மஹா சபையார் தீர்மானமும் செய்தார்கள்.

சென்ற இந்தியா சட்டசபை தேர்தல் காலத்தில் ஹிந்து மஹா சபைத் தலைவரான பாய் பரமானந்தர் முதலியவர்கள் சமூக மதாசார சம்மந்தமான எவ்வித சட்டத்தையும் எதிர்ப்போமென்று வாக்குறுதி அளித்தார்கள்.

1938ம் வருஷத்தில் சாரதா சட்டத்திற்கு பீ. தாஸ் அவர்களால் கொண்டுவரப்பட்ட மசோதா விவாத காலத்தில் ௸ ஹிந்து மஹா சபை தலைவர் மௌனம் சாதித்தார்.

சுமார் ஒரு வருஷ காலத்திற்கு ஏறக்குறைய நமது சேலம் தலைவரான ஸ்ரீ Y. K. சேஷய்யர் அவர்களும் அவர்களது நண்பர்களும் சேலத்திற்கு விஜயம் செய்திருந்த ஹிந்து மஹா சபை தலைவரான ஸ்ரீ சவர்க்கார் அவர்களை சந்தித்து சமூக மதாசார விஷயத்தில் உங்களது ஸபையின் அபிப்ராயம் என்னவென்று கேட்டதற்கு ௸ ஸபை தலைவரான ஸ்ரீ சவர்க்கார் அவர்களால் சமூக மதாசார வழக்கசீர்திருத்த விஷயத்தில் ஹிந்து மஹா சபைக்கும் காங்கிரஸிற்கும் ஒரே அபிப்பிராயம் தான் என்று பதில் அளிக்கப்பட்டது'

ஆகையால் கேவலம் தலைவர்களது பொய் மொழியான உறுதியை கொண்டு நாம் அவர்களுடன் சேர்ந்து ஒத்துழைப்பதென்பது உசிதமில்லை என்று தோன்றுகிறது.

ஹிந்து மஹா சபையார் வருகிற அகில இந்திய மஹாநாட்டில் சமூக மதாசார சம்மந்தமான சீர்திருத்த விஷயங்களை அந்தந்த சமூகத்தாரின் மதக் குருக்களுடையவும் பண்டித பெரியோர்களுடையவும் அபிப்பிராயத்தை தெரிந்து அதன்படி நடக்கிறோமென்றும் ௸ சபையார் தனியாக சமூக மதாசார விஷயங்களில் யாதொரு சீர்திருத்தமும் செய்யவில்லை என்று பந்தோபஸ்து விதியும் ஏற்படுத்தி கொடுத்தால் நாம் அந்த சபையுடன் சேர்ந்து ஒத்துழைத்து சுதர்மத்துடன் கூடிய தேச க்ஷேமத்திற்கு முயற்சி செய்வது உசிதம்.

மேலே சொல்லப்பட்ட விஷயங்களை நமது தலைவர்கள் "ஒற்றுமையுடன்" ஆழ்ந்து நன்றாய் ஆலோசனை செய்து எந்தவிதமான வழியில் நமது சுதர்மத்துடன்கூடிய தேசமானது தழைத்தோங்கும் என்பதை தீர்மானித்து முடிவுக்கு வரவேண்டுமாய் கருணாபிரவாக மூர்த்தியான ஸ்ரீ சிவசக்தியாத்மிக சித்ஸ்வரூபத்தை சதா தியானிக்கிறோம்.

ராமனாத சாஸ்திரிகள் பனையூர்
நைஷ்டிகபிரம்மசாரி

மதுரை ஹிந்துக்களின் மாபெருங் கூட்டம்

ஹிந்து மஹாஸபைக்கு நிபந்தனை

மத விஷயத்தில் புகக்கூடாது

அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கத்தின் பெருங்கூட்ட மொன்று 21-12-40 சனிக்கிழமை அன்று மதுரையில் திலகர் கட்டத்தில் கூடியது. சுமார் 5000 ஜனங்கள் வரை கூடி இருந்தார்கள். ஸ்ரீமான் ராவ் சாகேப் நடேசய்யரவர்கள் தலைமை வகித்தார்கள்.

கூட்டத்தில் முக்கியமாக ஸ்ரீமான்கள் ராவ் பஹதூர் ஆர். நரஸிம்ம அய்யங்கார், என். ஆர். கிருஷ்ணசாமி அய்யங்கார் (நகரத்தலைவர்) எம். கே. வைத்தினாதய்யர், அட்வோகேட், கும்பகோணம், எஸ். மஹாலிங்க அய்யர், மானேஜிங் டைரக்டர், கும்பகோணம் பாங்கி லிமிடெட், கும்பகோணம் வி. ஆர். விஸ்வநாதய்யர், அட்வோகேட், திண்டுக்கல், வி. சுப்பராய அய்யர், மாஜிஸ்ட்ரேட், எம். வெங்கிடாசலய் அய்யர், அட்வோகேட், S. சங்கர சுப்ரமண்ய அய்யர், அட்வோகேட், K. R. நாராயணசாமி சாஸ்திரிகள். ஆத்தங்குடி கதிரேசன் செட்டியார், ராமா நுஜதாதாசாரியார் முதலியவர்கள் விஜயம் செய்திருந்தார்கள்.

அக்கிராஸனரவர்கள் தமது உரையில் உலகம் தற்பொழுது அனுபவிக்கும் அவஸ்தைகளுக்கும், ஐரோப்பா முதலிய இடங்களில் நடக்கும் யுத்தத்திற்கும், காங்கிரஸ் அதிகாரத்திலிருந்துவீழ்ச்சியடைந்ததற்கும், பிரிட்டிஷாரின் குழப்பத்திற்கும் காரணம் மதகோட்பாடுகளுக்கும், மதத்திற்கும் சரியான இடம் அளிக்காததினால் தான்.

இந்தியாவிலுள்ள எல்லா கக்ஷிகளும் சுயராஜ்யம் வேண்டும் என்று கேட்கும் பொழுது சுயராஜ்யம் என்பது ராஜீயமும், வியாபாரமும் மட்டும்தான் சேர்ந்தது என்று நினைப்பதினால் தவறு செய்து விடுகிறார்கள். அந்தந்த மதத்தினர்கள் தம்தம் மதக்கோட்பாடுகளை அனுஸரித்து அதன்படி நடக்க விடப்பட்டால்தான் சுயராஜ்யம்முடிவு பெற்றதாகும். 25 கோடி மக்களின் கோரிக்கையாகிய பால்ய விஹாகத்தடை மசோதாவிலிருந்தும், ஆலயப்ரவேச சட்டத்திலிருந்தும் தங்களுக்கு விடுதலை அளிக்கவேண்டுமென்பதை கவர்ன்மெண்டார் நிராகரித்து விட்டார்கள். அப்படி அவர்கள் விடுதலை அளிக்க இணங்கி அளித்து விட்டார்களேயானால் அந்த க்ஷணமே அவர்கள் சண்டையில் வெற்றியுடன் திரும்புவார்கள் என்பதில் சந்தேகமில்லை. இந்தியர்கள் பிரிட்டிஷார்களுடன் சண்டையில் ஒத்துழைக்கவேண்டும் என்றும் சொன்னார்கள்.

கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. பிரிட்டிஷ்காரர்களின் இந்தியாவின் ராஜீய விஷயங்களிலும் முக்கியமாக ஸனாதன ஹிந்துக்களுக்கு ஆலயப்பிரவேச சட்டத்திலிருந்து விடுதலையளிப்பதிலும் தாராளமற்ற போக்கை கண்டித்து இந்தியா தன் சொந்த நன்மைக்காக பிரிஷ்டிஷாருக்கு ஒத்தாசை செய்யவேண்டுமென்றும்,

ஹிந்து மஹாஸபை தம் தலைவர் காரியதரிசிகள் இன்னும் மற்ற பிரதான பிரமுகர்களின் வழியாய் ஜாதி சமயம் போகவேண்டும் என்றும் மதமாறுதல்ஏற்பாடுகள்வேண்டும் என்றும் தீண்டாமை எடுபடவேண்டும் என்றும் ஒதுக்கப்பட்ட ஜாதியார்கள் கோவிலுள் பிரவேசிக்க அனுமதிக்கப்படவேண்டும் என்றும் சொல்லுவதுடன் 19—11—40 தேதியிட்ட ஸ்ரீ ராவ் சாகிப் நடேசய்யர் பஹிரங்கக்கடிதத்திற்கு பதிலளிக்காமலும் மதுரை மகா நாட்டைப் பற்றிய பிரசுரத்தில் மேற்கண்ட கொள்கைகளையே பஹிரங்கமாக வெளியிட்டிருப்பதினாலும் ஹிந்து மஹாஸபை ஹிந்து ப்ரதிநிதியாகாதென்றும், ஹிந்து மதத்திற்கும் ஹிந்து வாழ்க்கைக்கும் ஏற்பட்டிருக்கிற இந்தப் புதிய தடங்கலுக்கு இடங் கொடுக்காமலிருக்கும்படிக்கு எச்சரிக்கை செய்தும்.

மேற்கண்ட நான்கு கொள்கைகளையும் அகற்றியோ அல்லது தங்கள் திட்டத்திலிருந்து 'ஹிந்து' என்ற வார்த்தையை அதி தவறுதலுக்கு இடங்கொடுப்பதால் அகற்றியோ இச்சபை முக்கியமாக ராஜீய விஷயங்களில் மட்டும் வேலை செய்து கொண்டு மத சம்பந்தமான விஷயங்களில் தலையிடாமல் இருக்கும் படிக்கும் இக் கூட்டம் கேட்டுக் கொண்டும் திருவையார் ஸம்ஸ்கிருத காலேஜ் ஹாஸ்டலில் கட்டாயமாக சமபந்தி போஜனம் ஏற்படுத்திய தஞ்சை ஜில்லா போர்டின் தீர்மானத்தை தீவ்ரமாக ஆக்ஷேபித்தும் மேலும் அக்காலேஜ் ஆரம்பித்தவரின் நோக்கத்திற்கு முற்றும் மாறுபட்டதாகவும், ஹிந்துக்களின் அடிப்படையான கொள்கைகளுக்கு முற்றும் விரோதமுள்ளதாகவும் இருப்பதால் அதை அனுமதிக்காமலிருக்கும்படி கவர்ன்மெண்டாரை வேண்டிக் கொண்டும், பிராமணர்களையும், ருதுவாவதற்கு முன் கல்யாணம் செய்ய கடமைப் பட்டவர்களையும் சாரதா பால்ய விவாக தடைச் சட்டத்தினின்று விலக்களிக்கும்படி மறுபடியும் வற்புறுத்தியும், இக்கூட்டம் பிரிட்டிஷ் ராஜாங்கத்தாரையும கொச்சி மஹாராஜா அவர்களையும் மேன்மை தங்கிய ஹைதராபாத் நைஜாம் தம் ராஜ்யததில்கொண்டுவரப்பட்ட பால்ய விவாஹத் தடை மசோதாவை நிராகரித்ததை நோக்கும்படிக்கு கேட்டுக் கொண்டும்

இக்கூட்டம் மேன்மை பொருந்திய நைஜாம் கவர்ன்மெண்டாருக்கு பால்ய விவாஹத்தடை மசோதாவை நிராகரித்தது பற்றி தங்களது ஆற்றலை தெரிவித்துக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றினார்கள்.

தமது முடிவுரையில் அக்கிரான ரவர்கள் ஹிந்துக்களின் ஐந்து முக்கிய கொள்கைகளை ஹிந்து மஹாஸபை மறுப்பதால் அது ஹிந்துவின் பிரதிநிதியாக ஆகாதென்றும், ஆசார ஹிந்துக்களின் கொள்கைகளை பாதுகாக்க ஹிந்து மஹா சபையின் நடவடிக்கைகளை எதிர்க்க வேண்டியதாக ஆகிறதென்றும் சொன்னார்கள். ந. கி.

ஓர் வித்வான் காலமானார்

குடந்தை ஸ்ரீ வைஷ்ணவர்களுள் பிரஸித்தராயிருந்த வித்வான் ஸ்ரீ. உ. வே. ஸுந்தரராகவதாதாசாரியஸ்வாமி சென்ற வாரம் வியாழக்கிழமை பரமபதம் அடைந்தார். இவருக்கு அநேக சிஷ்யர்களுண்டு. நல்ல சிஷ்டர். இவருடைய மூத்தகுமாரர் ஸ்ரீ ஸ்ரீநிவாஸராகவதாதாசாரியர் B A. L. T. திருவல்லிக்கேணி ஹிந்து ஹைஸ்கூல் உபாத்யாயராயிருக்கிறார்.

சந்தாதார்களுக்கு அறிவிப்பு

ஆர்யதர்மம் பத்திரிகையின் இந்த ஸஞ்சிகையுடன் இவ்வருஷம் பூர்த்தியாகி விடுகிறது. புதிய வர்ஷத்திற்கான சந்தாவை சந்தாதார்கள் சீக்கிரத்தில் அனுப்பி எப்போதும் போல் பத்திரிகையை ஆதரிக்கவேண்டுகிறோம்.

புதிய வருஷத்திற்கு சந்தா 2—4—0 ஆக குறைக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் அபிமானிகள் தாமஸியாமல் சந்தாவை அனுப்புவதுடன் அங்காங்கு புதியசந்தாதார்களையும் சேர்த்து உதவி புரியக்கோருகிறோம.

ஏற்கனவே புதியவர்ஷத்திற்கும் சந்தா செலுத்தி விட்டவர்களுக்கும் 2—4—0 வீதம் வரவுவைத்துக் கொள்ளப்பட்டு பாக்கித் தொகையை அடுத்த வருஷத்தின் கணக்கில் வைத்துக்கொள்ளப் படும். மானேஜர்.

ஆத்ரேய ரஸாயனம்.

நாடி நரம்புகளுக்குப் பலத்தைக் கொடுக்கும். சரீரபுஷ்டியைச்செய்யும். அசதி களைப்புச்சோர்வுகளை உடனே நிவர்த்திசெய்யும். நல்ல பசி எடுக்கும். இழந்த பலத்தை திருப்பி அளிக்கும். உத்தம ரஸாயனம்.

ஆத்ரேய ஆயுர்வேதிக் ஒர்க்ஸ்,
தென்னூர்ரோடு, திருச்சினாப்பள்ளி

ஸ்தாபகர்:-
V. B. நடராஜசாஸ்திரீ,
ஆயுர்வேதாசார்ய (Regd.)

வால்மீகரும் தமிழும்

(3-ம் பக்கம் தொடர்ச்சி)

பதான் என்ற பகுவசனமும் ஒரு பாம்புக்கு பல கால்கள் உண்டென்று வால்மீகி அறிந்திருந்ததை விளக்குகின்றது. பாம்பின் கால் பாம்புக்குத்தெரியும் என்ற பழமொழியில் கால் என்பதற்குப்பதுங்குமிடம் எனப்பொருள் கொண்டால் அவ்வசனமேஇவ்விடத்தில் பொருத்தமற்றதாகும் புத்து போன்ற பதுங்குமிடம் பலருமறிந்ததே. அவ்விடங்கள் பாம்புகளுக்குத் தான் தெரியும் என்பது அர்த்தமற்றதாகும். ஆக இத்தமிழ் பழமொழியை ஸம்ஸ்கிருதத்தில் மொழி பெயர்த்திருப்பதாகவும் வால்மீகி தமிழ் வழக்குகளை அதாவது இலக்கணப்பிழையுள்ள பதங்களையும் நற்பதங்களென விளக்கக்கருதி அவைகளை தன்நூலில் புகுத்தினார் என்றும் வாதிப்பது மிகவும் அசம்பாவிதம் (தொடரும்)

ஆழ்வார் திருநகரி· உத்ஸவம்

ஆழ்வார் திருநகரி ஸ்ரீ ஆதிநாதர் ஆழ்வார் தேவஸ்தான மார்கழி ஸ்ரீ வைகுண்ட ஏகாதசி மகோத்ஸவம் 29-12-40 ஞாயிறன்று ஆரம்பமாய் 20—1—41ல் சம்பூர்ணமாகும் இம்மகோத்ஸவ மத்தியில் மதசம்பந்தமான பல அரிய உபந்யாஸங்களும் நடைபெறும்.

பிரபல ஸனாதனிஸ்ட் காலமானார்

ஆழ்வார் திருநகரி தேவஸ்தான ஸ்தலத்தாரும் ஆலயப்பிரவேச எதிர்ப்பு கிளர்ச்சியில் விசேஷ சிரத்தை காட்டி உழைத்தவருமான ஸ்ரீ அனந்தமன்னாரய்யங்கார் (பிரபல தர்மிஷ்டர்) சென்ற புதனன்று காலமானார்.

சென்னை மாகாண வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்க மஹாநாடு,

ஸ்ரீ புருஷோத்தம தாஸ் கோகுல் தாஸின் தலைமை பிரசங்கம்.

டிசம்பர் 9, 10, 11, தேதிகளில் திருவண்ணாமலையில், சென்னை மாகாண வர்ணாச்ரம மஹாநாடு நடைபெற்றது. மஹா நாட்டின் தலைவரின் பிரசங்கம் ஸாரமாவது:—

என்னை இம்மஹா நாட்டின் தலைவராக தேர்ந்தெடுத்ததற்கும், நீங்கள் எனக்கு அளித்த மஹத்தான வரவேற்பிற்கும் என்னுடைய மனப்பூர்வமான வந்தனத்தை முதலில் சமர்ப்பிக்கிறேன். இந்த பாக்யம் இந்த இடத்தில் கிடைத்ததற்கும், ஒரு முக்கியமான சந்தர்ப்பத்தில் ஏற்பட்டதையும் நினைத்தால் நான் பேருவகை அடைகிறேன். புனிதமான தீபத்தின் பிரதிநிதியாகிய பகவான் ஸ்ரீ அருணாசலேஸ்வரர் கிருபையால் நாம் எல்லோரும் இப்போது கூடியிருக்கும் நோக்கத்தில் ஜயமடைவோம் என்ற திட நம்பிக்கை உண்டாகிறது.

நான் முதலில் ஐரோபாவில் நடந்துகொண்டிருக்கும் அக்ரம சம்பவங்களைப் பற்றி கொஞ்சம் சொல்ல விரும்புகிறேன் உலகமே அழிந்து போகும் நிலையில் இருக்கிறது. அரசர்களும், அதிபர்களும், நாட்டை விட்டு ஓடி, வேறு இடங்களில் அடைக்கலம் புகுந்து வாழ்கிறார்கள். நகரங்கள் பாழடைந்து கிடக்கின்றன. ஆபத்துக்கு தப்ப ஸ்திரீகளும், குழந்தைகளும் தங்களது வீட்டை புறக்கணிக்கிறார்கள். தர்மம் கீழே போய், மிருகத்தன்மை மேலோங்கி நிற்கிறது. சிறிது காலம் முன்பு சமாதானமும், செல்வமும், நாகரீகமும், விளங்கின நகரங்களை இன்று சுடுகாட்டிற்கு ஒப்பிடலாம். மனிதன் தனது சொந்த சகோதரர்களையே, காட்டில், மிருகங்களை வேட்டையாடுவது போல் கொல்கிறான். தேசங்களிடையே உள்ள இப்போராட்டத்தில் பாமர ஜனங்கள் தான் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.

தேசங்களிடையே நடக்கும் இப்போராட்டத்தில் பாமர ஜனங்கள் தான் அதிகமாக துன்பப்படுகிறார்கள். இங்கிலாந்தில் சிறந்ததும், பக்திற்குறிய கட்டிடமாகிய பால் முனிவரின் மாதாகோவிலின் மீது வேண்டுமென்றே குண்டுமாரி பொழிந்ததானது வருந்தத்தக்கதாகும். இம்மாதிரியான கஷ்டங்கள் ஏற்படுவதின் காரணம் சுலபத்தில் விளங்கும். ஸ்வதர்மத்தை விட்டதாலும், அதனால் நாட்டில் அதர்மம் தங்குவதற்கு இடமேற்பட்டதால் தான் என்பது என்னுடைய அபிப்ராயம். முக்கிய காரணம் என்னவென்றால் கீர்த்தி வாய்ந்த பல புராதனமானதும், தெய்வீகம் வாய்ந்ததுமான பல கோவில்களையும், முக்கியமாக மதுரை ஸ்ரீ மீனாக்ஷி கோவிலை, தீண்டாதார்களுக்கு திறந்து விட்டதே. பகவத் சம்பந்தமான ஆகமங்கள் தீண்டாதார்களை கோவிலுக்குள் அனுமதித்தால் கீழ்கண்ட விபரீதங்கள் விளையும் என்று சொல்லுகிறது.

1. ராஜ்யங்கள் சீர்குலையும்; அரசர்கள் ஸிம்மாஸனத்தை விட்டு ஓடும்படி நேரிடும்.

2. பூமியிலும், ஆகாயத்திலும், ஜலத்திலும் பல விபத்துக்கள் ஏற்படும்.

3. தீப்பற்றி எரிதலும், பூகம்பமும், எரிமலைகளும்: வெள்ளச்சேதமும், புயற்காற்றும், மோதுதல் கஷ்டங்களும் ஏற்படும்.

4. பஞ்சமும், பிணியும் முன்னேங்கி நிற்கும் தேசமுழுவதும் குற்றங்களும், கொலை களவுகளும், அதிகரிக்கும்.

5. யுத்தத்தினாலும், சில்லரை கலகங்களினாலும் மனித உயிர்சேதம் கணக்கில்லாமல் உண்டாகும்.

6. உலகமே கெட்ட நடத்தைக்கும், அனாசாரத்துக்கும், மிருகத்தன்மைக்கும், புகலிட மாய்விடும்.

பல நவீன ஆராய்ச்சிக்காரர்களால் 5000 வருஷங்களுக்கு மேற்பட்ட பழய கிரந்தம் என்று ஒப்புக்கொள்ளப்படும் சரக ஸம்ஹிதையில் கீழ்க்கண்டதை காண்கிறோம்.

"பஞ்சால தேசத்தில், காம்பில்ய ராஜயம் இருக்கிறது. அது அநேக பிராம்மணர்கள் வசிப்பிடம். ஒரு சமயம் ஆத்ரேய மஹரிஷி தன் சிஷ்யர்களுடன் கங்கைக்கு சமீபமுள்ள காடுகளில் சஞ்சரித்துக் கொண்டிருந்தார். அப்போது தன் சிஷ்யனை அக்னிவேசனிடத்தில் பின்வருமாறு சொன்னார்:—

"ச்ருதி, ஸ்மிருதி, புராணங்களிலும், சாஸ்திரங்களிலும் சொல்லியுள்ள கோட்பாடுகளை வ்யாக்யானம் செய்வதிலும் அர்த்தம் சொல்வதிலும் பல வித்தியாசங்கள் ஏற்படுவதற்கு அதர்மமே மூலகாரணம். ஆகாயத்திலும், நவக்கிரஹங்களினாலும் சூர்ய சந்திரர்களாலும், தீயினாலும், திக்குகளிலும் ஏற்படும் கோளாறுகளுக்கு காரணமும் அதர்மமே. முறைப்படிக்கும் நல்ல மூலிகைகளினாலும் செய்யப்பட்ட ஔஷதங்கள் கூட வியாதிகளை கொல்வதற்கு பயனற்றுப் போய்விடுகின்றன. அதனால் கணக்கில்லா மரணங்கள் ஏற்படுகிறது. பருவக்காற்றுக்களினால் ஏற்படும் கஷ்டங்களுக்கும் அதர்மம் தான் காரணம். அப்படிப்பட்ட அதர்மத்திற்கு காரணம் நாம் முன் செய்த தீவினைகள் தான். நாம் தீவினைகள் செய்வது அஞ்ஞானத்தினால் தான். நாட்டு அதிகாரிகளால் தர்மத்தை விட்டுவிடுவதற்கும், அனாசார வழக்கங்களை கைக்கொள்வதற்கும் ஜனங்கள் பழக்கப்பட்டால், அவர்களே ஸர்வநாசத்திற்கும் காரணபூதர்களாகிறார்கள். பிறகு ஜனங்கள் மீது தேவர்களே கோபமடைகிறார்கள். பருவங்களில் உள்ள நன்கள் ஏற்படுவதில்லை.

அதிக மழையும், காலம் தப்பியும் மழை பெய்கிறது. பூமி பாழாய் விடுகிறது. ஒஷதிகளுக்குள்ள குணங்கள் போய்விடுகின்றன நீர் நிலைகள் வற்றி விடுகின்றன. தீண்டாமை விதிகளையும் ஆகார நியதிகளையும் புறக்கணித்ததால் மனித உயிர்ச் சேதமே விளைகிறது.

மேற் சொன்னவைகள் எல்லாம் அநுப பூர்வமாக நடப்பதை நாம் பார்க்கிறோம். வைஸராயால் சென்னை ஆலயப்பிரவேச சட்டத்துக்கு சம்மதி கொடுக்கப்பட்ட மறு தினமே நம்மை ஆள்பவர்கள் யுத்தத்தில் இழுக்கப்பட்டார்கள். நமது ஆகம சாஸ்திரங்களின் தெய்வீகத்துக்கும் அதனுடைய மறுக்கப்படாத உண்மைக்கும் இதுவே உயரிய சான்றாகும். மேலே சொன்ன உண்மை சம்பவமானது எப்பேர்ப்பட்ட நாஸ்திகனையும்கூட கண் திறக்கச் செய்யும்.

[தொடரும்]

கீழப்பூங்குடி,

வர்ணாச்ரமஸங்க ஆண்டுவிழா.

சென்ற மாதத்தில் நடத்தவேண்டிய இச்சங்கத்தின் ஆண்டு விழா சிலசபை மெம்பர்களின் ஸௌகர்யத்தை உத்தேசித்து வழக்கப்படியுள்ள பூர்ணிமையில் சபையை நடத்தி மறுதினத்தில் பிர்மஸ்ரீ எரியூர் ஜ்யௌதிஷிக சிரோமணி நாராயணய்யங்கார் ஸ்வாமிகளின் தலைமையில் மாலை 3 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது. தலைவரின் கலியின் கொடுமையும் வர்ணாசிரம தர்மங்களின் நிலைமையும் என்ற விரிவும் தெளிவும் உள்ள பேருரையின் பின் பிர்ம்மஸ்ரீ விசுவனாத சாஸ்திரிகள் ஸங்கமிருக்கவேண்டிய ஆவச்யகதையை மெம்பர்கள் இச்சங்கத்தை ஒரே மனதாய் நடத்த வேண்டியதையும் ஆங்காங்கு தர்மபிரசாரஞ் செய்ய வேண்டிய முறைமையும் இதற்காக நம்தலைவர்கள் உயிர் உடல் பொருள்களை லக்ஷ்யம் பண்ணாமல் அதே கவலையாய் இரவு பகலாய் வேலை செய்வதையும் எவரும் அங்கீகரிக்கும்படியான ரீதியில் உபந்யஸித்தார்கள்

பிர்ம்மஸ்ரீ P. S. V. வைத்தினாத சாஸ்திரிகள் அசுத்தமான கோவில்களை சுத்தி செய்து தார்மிகர் தாராளமாய் தரிசிக்கச் செய்யவேண்டிய மார்க்கத்தை நம் ராஜாங்கத்தார் மூலம் பெறுவதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்யவேணுமென்றும் உருக்கமாக எளிய நடையில் பிரஸங்கமாரி மொழிந்தனர். பிர்மஸ்ரீ சங்கங்கார்யதரிசி S. கோவிந்தய்யங்கார் அவர்கள் திருவண்ணாமலையில் நடந்த சென்னைமாகாண வ ஸ்வ ஸங்கத்தின் நிகழ்சிகளை சுதேசமித்திரன், ஆர்யதர்மம், மூலமாய் சபையோர்களை பற்றிச்செய்து அதன் தீர்மானங்கள் யாவும் அருணாசலேச்வரர் கிருபையால் ஸித்தி பெறும் என்று அழுத்தமாக சபையோர்களின் கரகோஷங்களுடன் சொன்னார்கள் பிர்ம்மஸ்ரீ அனந்தகிருஷ்ண தீக்ஷிதர் அவர்களால் ஷை கோவிந்தய்யங்காரையே இச்சங்கம் நிரந்தரகாரியதரிசியாகஅடைந்து நீடூழி இலங்கவேணுமென்ற ஒரு தீர்மானம் கொன்டுவர அதை பிர்மஸ்ரீ கல்யாணசுந்தர சாஸ்திரிகள் அநுமோதிக்க ஷை தீர்மானம் கரகோஷத்தினிடையே நிறைவேறிற்று.

பிர்ம்மஸ்ரீ ராமஸ்வாமி கனபாடிகள் இச்சங்கம் தொடங்கிய முகூர்த்தத்தின் பலனாக 2 வித்வான்கள் இங்கு விஜயம் செய்திருக்கிற படியால் ஷை வித்வான்களை தினமும் அபேக்ஷகர்களுக்கு ஸம்ஸ்கிருதபாடம் இச்சங்கதின் சார்பாகச் சொல்லும்படி கேட்டுக்கொள்ள வேண்டு மென்று ஒரு தீர்மானம் கொண்டுவர அதை யாவரும் அங்கீகாக்க ஷை சபையோருடைய வேண்டுதலுகிணங்கி 2 வித்வான்களும் யாதொரு பிரதி பிரயோஜனத்தையும் எதிர்பாராமல் பாடஞ்சொல்வதாகவும் அப்போதப்போது ஸ்ரீமத் ராமாயணத்திலுள்ள தர்மஸாரங்களைச் சொல்வதாகவும் ஆஸ்தையிருந்தால் ஆஹ்னிககாண்டதை அடிமுதல் விரிவாகப் பிரவசனம் செய்வதாகவும் அங்கீகரித்தனர். பிறகு தலைவர்களின் பின்னுரையில்வேத பாகத்திலும் உபயுக்தமான அம்சங்களையும் அத்யாபனஞ் செய்து வைக்க வேண்டுமென்று சொன்னதை எல்லோருமங்கீகரித்து காகோஷம் செய்தனர். பிறகு ஸ்ரீ ராமபடத்திற்கு திவ்ய பஜனையுடன் தீபாராதன நிவேதனங்கள் செய்து பிரஸாத விநியோகஞ் செய்து சந்தன தாம்பூல உபசாரங்களுடன் இரவு 10 மணிக்கு சங்கம் இனிது நிறைவெய்தது.

ந. நி

ராமாயணத்தை எப்படி அறியவேண்டும்?

(14—11—40 ஆர்யதர்மம் தொடர்ச்சி)

இரண்டாவதாக

ராமாயணம் ஒரு தனிப்பட்ட மதம் அல்லது மார்கத்தை போதிக்கவந்ததல்லவென்றும் அது எல்லா மத அல்லது மார்கக் கிரந்தங்களுக்கும் மேம்பட்டது என்றுமறிய வேண்டும். ஒரு குறிப்பிட்ட மார்கத்தில் நம்பிக்கையும் மற்றவைகளில் உதாசீனமும் கொண்டவர்களுக்கு ராமாயணம் தன் மதத்தையே போதிப்பதாகத் தோன்றும். அத்துடன் ஏதாவது ஒரு மார்கத்தில் த்வேஷமுமிருந்துவிட்டால் ராமாயணத்தின் மேன்மையை யறிந்துகொள்ளவே முடியாது.

ஹிந்து மதம் சமுத்திரம் போன்றது. சமுத்திரத்திலிருந்து மழையுண்டாகி பல நதிகளாகப்பெருகி கடைசியில் சமுத்திரத்தையே யடைவது போல் ஹிந்து மதமும் பல மார்கங்களை யுண்டாக்கி கடைசியில் தன்னடக்கம் செய்து கொள்ளுகிறது. பற்பல காரணங்களால் பற்பல மார்க்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு மார்கத்துக்கும் சாஸ்திரங்களும் புராணங்களுமிருக்கின்றன. அவை அந்தந்த மார்கத்தின் சிலாக்கியமான அம்சங்களை எடுத்துச் சொல்லும். ஒரு மார்க்கத்திலுள்ளவர் சஞ்சலபுத்தியில்லாமலிருக்க வேண்டி சில விடங்களில் மற்றவைகளை குறைத்தும் கூறப்படுகிறது. சில புத்திமான்கள் தங்கள் மார்கத்திலுள்ள பக்தியதிசயத்தாலும் இம்மாதிரி கிரந்தங்களையியற்றியிருக்கிறார்கள். ஒருகுறிப்பிட்ட விடத்தையடைய பல நல்ல வழிகளிருந்தால் எந்த வழியாய்ப் போனாலும் சுலபமாய் அந்த விடத்தை யடைந்துவிடலாம். ஆனால் ஒரு வழியில் போகிறவன், அது சரியோ, தப்போவென்ற சந்தேகத்துடன் வெவ்வேறு வழியை மாற்றிக்கொண்டேயிருந்தால் சுலபமாய் அந்த விடத்தையடைய முடியாது. இம்மாதிரி சஞ்சல புத்தி யுண்டாகாமலிருக்க வேண்டியே பல பல மார்க கிரந்தங்களேற்பட்டிருக்கின்றன. எல்லா நதிகளுக்கும் மூலமும் முடிவும் சமுத்திரமாயிருப்பது போல் எல்லா மார்க்கங்களுக்கும் மூலமும் முடிவும் ஒன்றுதான். இந்த திருஷ்டாந்தத்தையே பகவான் வால்மீகி, ராமாயணத்துக்குச் சொல்லுகிறார்.

ஸமுத்ரமிவ ரத்நாட்யம் ஸர்வஶ்ருதி மநோஹரம்

இதன் அர்த்தத்தை சிந்தித்துப்பார்க்கப் பார்க்க ராமாயணத்தின் பெருமை வெளிப்பட்டுக்கொண்டேயிருக்கும். காவ்யங்களுக்கவசியமான வ்யங்க்யார்த்தம், த்வனி இவைகளின் சுவரூபத்தை இதன் அர்த்தங்களிலிருந்து அறிந்து கொள்ளலாம். சிலமுக்கிய வியாக்கியாதாக்களின் அர்த்தங்களை யறிவது ருசிகரமாயிருக்குமென்று கீழே குறிப்பிடுகிறேன்.

ஸ்ரீராமீயம் என்கிற திலகவ்யாக்கியானமாவது:-

ரத்நை: காவ்யகுணாலங்கார வ்யங்க்யை:, ஆட்யம் பூர்ணம் ஸர்வ ஶ்ருதீநாம்ஸநோஹ்ருதா: ஸாரபூதா: உபநிஷத: தாஸாம் ஸாரம் ததர்த்தப்ரதிபாதகம், தேந மோக்ஷஸாதகம்

(பொருள்) "காவ்ய குணங்களாகின்ற அலங்காரங்கள் வியங்கியார்த்தங்கள் இவைகளாகின்ற ரத்னங்களால் நிறைந்தது. வேதங்களுக்கெல்லாம் ஸாரமான உபநிஷதர்த்தங்களை விளக்குகிறது. ஆகவே மோக்ஷ பலத்தைக் கொடுக்கத் தக்கது."

ஸ்ரீ மகேசுவர தீர்த்தர்:—"ரத்தினங்களுக்குச் சமமான பதங்கள் அர்த்தங்கள் இவைகளால் பரிபூர்ணமானது. ஶ்ருதி மநோஹரம் என்பதற்கு ஷட்ஜம்முதலான 22 சுருதிகளால் சுகத்தைக் கொடுக்கிறது அல்லது எல்லாப் பிராணிகளுடையவும் காதுகள் மனது இவைகளை தன் வசப்படுத்தி கொள்கிறது. அல்லது, எல்லா உபநிஷத்துக்களுடையவும் தாத்பர்யத்தை வெளிப்பத்துகிறது."

ஸ்ரீ கோவிந்த ராஜாள்:—"சங்கு கிளிஞ்சல் முதலியவைகளால் கூடியதாயிருந்த போதிலும் முக்கியமாய் ரத்தினங்களை வகிக்கும் சமுத்திரம் போல் இருக்கிறது. சகல ஜனங்களின் காது, ஹிருதயம் இவைகளை அபகரிக்கிறது. சப்தங்களின் அழகால் காதுகளையும் அர்த்தங்களின் அழகால் ஹிருதயத்தையும் அபகரிக்கிறது."

இப்படி சமுத்திரம் போன்றிருக்கின்றது ராமாயணம். சமுத்திரத்தினால் பிரயோஜனமடையாத ஜீவப்பிராணிகளே கிடையாது. அதேபோல் தான் ராமாயணமும். உலகத்தில் பெரும்பாலோரால் கொண்டாடப்படும் கிரந்தம் ஒன்றைக் குறிப்பிடவேண்டுமென்றால் அது வால்மீகி பகவானால் செய்யப்பட்ட ஆதிகாவ்யமெனப்படும் ராமாயணமேயாகும்.

இப்படிப்பட்ட உயர்ந்த கிரந்தம் தங்கள் தங்கள் மார்க்கத்தைத்தான் போதிக்கிறது என்று நிரூபிக்க மார்க்க வாதிகள் ஆசைப்படுவது இயற்கையேயாகும். இதே ரீதியில் தான், சிவோத்கர்ஷம் ராமாயணத்தின் தாத்பர்யமென்று சைவர்களும், விஷ்ணுவின் உத்கர்ஷம் தானென்று வைஷ்ணவர்களும், இன்னும் கர்மம், பக்தி, யோகம், ஞானம், இப்படி அந்தந்த மார்க்கத்தையே போதிக்கிறது என்று அந்தந்த மார்கத்தை நம்பியவர்களும் வியாக்கியானம் செய்திருக்கிறார்கள். இப்படி எல்லோருக்கும் இடம் கொடுப்பதிலிருந்தே அது எல்லா மார்க்கங்களுக்கும் பொதுவானதென்பது வெளிப்படுகிறது. ஒருமார்க்கத்தை குறைத்துக்கூற ராமாயணத்திலிருந்தே ஆதாரம் காட்ட வேணுமென்று முயற்சிக்கும்போது 1008 மாற்றுத் தங்கமாயிருக்கும் அதே ஆதி காவ்யம் எஃகு கட்டியாய் விடுகிறது. அதையும் கம்பியிழுக்கக் கஷ்டப்படுகிறார்கள் சில வியாக்கியாதாக்கள்.

உதாரணமாக தென்னிந்தியாவில் பிரபலமாயிருக்கும் ஸ்ரீ கோவிந்த ராஜரின் வியாக்கியானத்தில் சில விடங்களைக் குறிப்பிடுகிறேன். அவர் தன்னபிப்பிராயப்படி சிவனை குறைத்துக் கூறுவதாக ராமாயணத்தைக் கொண்டு ருசுபிக்க சிரமப்படுவதை அவைகளிலிருந்து அறிந்து கொள்ளலாம். அந்த அர்த்தங்களின் உசிதானுசிதத்தை வாசகர்களே அறிந்து கொள்ளட்டும்.

பாலகாண்டம் 43வது சர்க்கம் கங்காவதரண கட்டத்தில் பவாங்கபதிதம் தோயம் பவித்ரமிதி பஸ்ப்ருஶு: என்று இருக்கிறது. இதற்கு நிஷ்பட்சபாதமான வியாக்யானம் பின்வருமாறு:—

பவாங்கபதிதம் -பரமசிவனின் தலையில் விழுந்த, தோயம் - தீர்த்தம், பவித்ரம் - பரிசுத்தமானது, இதி-என்று, பஸ்ப்ருஶு: ஸ்பரிசித்தார்கள் அல்லது ஸ்நாநம் செய்தார்கள். (இந்த சுலோகத்துக்கு அடுத்தாற்போல் ஶாபாத்ப்ரபதிதா யே ச ககநாத் வஸுதாதலம்। க்ருத்வா தத்ராபிஷேகம் தே பபூவுர்கதகல்மஷா:। சாபத்தினால் பூலோகத்தை யடைந்தவர்களும் அதில் ஸ்நாநம் செய்து தோஷத்தை போக்கிக்கொண்டார்கள் என்றிருப்பது இவ்விடம் குறிப்பிடத்தக்கது).

ஸ்ரீ கோவிந்த ராஜர் இந்த சுலோகத்துக்கு கீழ்க்கண்டபடி நான்குவிதமாய் அர்த்தம் செய்கிறார்.

"(1)பவித்ரம் என்ற சாமான்யச் சொல்லால் சிவனுக்கும் மற்றவர்களுக்கும் பவித்ரம் என்று சொல்லப்பட்டது. சிவனுடைய தேக சம்மந்தத்திலிருந்து பவித்திரமாயிருக்குகையை அடைந்தாள் என்று சொல்லப்படுமிடத்திலும் சிவனுக்கு சுத்திகரத்தை கொடுத்தாள் என்றே அர்த்தம்." (பிறகு பாகவதத்திலும் பாரதத்திலும் தனக்கு ஆதாரமாய் சில சுலோகங்களை குறிப்பிடுகிறார்.)

"(2) சிவனுடைய தலையில் விழுந்ததால் பவித்ரம். முன்போல் (விஷ்ணுபாதத்திலிருந்து பிரவகித்தபோதிருந்ததுபோல்) அதிக பவித்திரமல்ல. ஆகையால் பஸ்ப்ருஶு: தொட்டார்கள். ஸ்நாநம் செய்யவில்லை."

"(3) சிவனுடைய சம்பந்தத்தால் பதிதம் கெட்டுப்போய்விட்டது என்றாலும் விஷ்ணு பாதத்திலிருந்து உண்டாகியதால் பவித்திரம் என்று தொட்டார்கள்."

"(4) நதீவேகேந ஸம்ஶுத்தி என்ற நியாயத்தை யனுசரித்து சிவனின் சம்பந்தம் விலகியதும்(ஓட ஆரம்பித்துவிட்டதால்) பவித்திரமாய்விட்டது என்றுவது தொட்டார்கள்."

அரண்யகாண்டம் 12-வது சர்க்கத்தில் ஸ்ரீராமர் அகஸ்தியாசிரமத்துக்குப் போனபோது அங்கே [illegible] தேவர்களின் ஸ்தானங்களைப் பார்த்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு பாடத்தில் சிவனுடைய ஸ்தானமிருந்ததாகச் சொல்லப்படவில்லை. மற்றொரு பாடத்தில் «உபேந்த்ரஸ்ய» என்பதற்கு பதிலாக «மஹேஶஸ்ய» என்றிருக்கிறது. இந்த இரண்டு பாடத்தியாயும் (அதாவது பரமசிவனுடை ஸ்தானம் இருந்தாலும் இல்லாவிட்டாலும்) சிவன் பூஜிக்கத்தகாதவர் என்றே ராமாயணத்தைக்கொண்டு ஸ்தாபிக்கிறார் கோவிந்தராஜர்! அவர் வியாக்கியானம் பின்வருமாறு:—

" இங்கு பூஜிக்கத்தகுந்த தேவதைகளுள் ருத்திரனைச் சொல்லாததிலிருந்து அவர் பூஜிக்கத்தக்கவரல்லவென்று சொல்லப்பட்டதாயாகிறது. இப்போது சில ஜனங்களால் பூஜிக்கப்படுகிறாரே யென்றால் அது தாமஸ சாஸ்திரத்தையனுசரித்தது என்று அறியவேண்டும். 'மஹேஶஸ்ய' என்ற ஒரு பாடமிருக்கிறதே யென்றால், முன் சர்க்கத்தில் அகஸ்தியரை தேவர்கள் உபாசிக்கிறார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறபடி உபாசிப்பவர்களும் உபாசிக்கப்படுபவர்களும் அங்கிருப்பதாகக் கொள்ளவேண்டியிருப்பதால் விரோதமில்லை". (அதாவது அகஸ்தியரை உபாசிப்பதற்காக ருத்திரன் அங்கு இருக்கிறார் என்று அர்த்தம்.) " அல்லது உபாஸநம் என்ற பதத்திற்கு கிட்ட இருப்பது என்று அர்த்தம். ஆராதனம் என்ற அர்த்தமில்லை".

இம்மாதிரி ஒன்றை உயர்த்தியும் மற்றவைகளைக் குறைத்தும்கூறும் வியாக்கியானங்களும், மற்றவைகளில் த்வேஷமில்லாவிடினும் ஒரே மார்க்கத்தைத்தான் எல்லாவிடங்களிலும் போதிக்கிறதென்ற வியாக்கியானங்களும், நடுநிலைமையான வியாக்கியா

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

பார்வதி=கல்யாணம்

(எஸ். கே. விச்வேச்வர சாஸ்திரிகள் மாஜி ஸ்கூல் இன்ஸ்பெக்டர்)

(சென்ற வாரத்தொடர்ச்சி)

சுந்தர அய்யர் சொந்த ஊரைவிட்டு மாற்றப்பட்டவுடன், சங்கரரும், வண்டு பூப்பூவாய்ப் பறந்து தேனைச்சேர்ப்பது போல் படிப்பு ருசிகண்டவராதலால், எங்கெங்கே சாஸ்திரஞ்ஞர்கள், வெகு பெரியவர்கள் இருப்பார்களோ, அந்த இடங்களையெல்லாம் விசாரித்து தெரிந்து போய், அவரவர்கள் இடம்உள்ள அரியபெரிய விஷயங்களை எல்லாம் கற்றுச்சதுச் சாஸ்திரப் பண்டிதரானார். அப்புறம் மைசூர், திருவிதாங்கூர், பரோடா, காசி, பஞ்சாப், முதலிய வடக்கே எட்டின மட்டும், எங்கெங்கே வித்வத்ஸதஸ் கூடுமோ அங்கெல்லாம் போய், முதல் ஸம்மானங்கள், தோடா, ஜோடி சால்வை, முதலியவைகள் பெற்றார். இப்படி இந்தியாவில் சுற்றும்போதெல்லாம் சினேகிதரை மறக்காமல், மாதம் இருமுறையாவது, தான்பல இடங்களில் படித்தும், கண்டும் அறிந்த பல விஷயங்கள், உலக நடவடிக்கைகள் இன்னும் அபூர்வமான விசேஷங்கள், இவைகளையெல்லாம் பற்றி சங்கர சாஸ்திரிகள் சுந்தரய்யருக்கு எழுதிக்கொண்டே வருவார். படித்த, அடக்கமுள்ள சுந்தரய்யர், உத்யோககர்வமின்றி சுற்றுப்பிரயாணத்தால் சங்கர சாஸ்திரிகளுக்கு ஏற்படும் உலக அனுபவங்களைச் சிலாகித்தும் தன் குடும்பவிஷயங்களைப்பற்றியும், தவறுமல் பதில் எழுதுவார். சுந்தரய்யர் உத்யோகத்தில் படிப் படிப்படியாய் உயர்ந்து கொண்டே வந்தார். பிறகு உத்யோகம் ஆரம்பித்த ஊருக்கே மாற்றப்பட்டார். சங்கரர், எங்கும் முதன்மை பெற்று தன் சினேகிதர் இருக்கும் சொந்த ஊரிலே வந்து தங்கினர். தன் சுந்தரத் தோழரோடு யோசித்துத் தனக்குத்தகுந்த ஒரு குடும்பத்தில் உள்ள, ஸரஸ்வதி என்னும் ஒரு பெண்ணை மணந்து கொண்டார். வெகு சீலராய் இருந்து வந்தார்.

சர்க்காரால் சிபார்சு இல்லாமலே "மஹாமஹோபாத்யாய" என்ற பட்டமும் அளிக்கப்பட்டது. இந்தியாவில் சாஸ்திர நிபுணர்கள் எங்கெங்கே உண்டோ அவர்களைப்பற்றி எல்லாம், பத்திரிகைகளில் வந்தால், அவைகளைக் கேட்டவுடன், தான் இன்ன இடத்தில் அவர்களுடன் சம்பாஷித்ததுண்டு என்று ஞாபகப்படுத்திச் சொல்வார். சங்கர சாஸ்திரிகளின் கீர்த்தி பரவாத இடமேயில்லை. சில பெரிய மிராசுதார்கள், இளம்வயதில் இவருக்கு ஏற்பட்டிருக்கும், அபாரயோக்யதையை முன்னிட்டு, வருஷாசனமாக 500 ரூபாய்க்குக் குறையாமல் உதவிவந்தார்கள்.

பரோபகாரமாக சாஸ்திரப்ரவசனம் வாரம் மும்முறை செய்து கொண்டு வருவார். அதற்கு வரும் கூட்டம் அதிகம். சிஷ்யர்களுக்கும் தினம் பாடம் சொல்லிவந்தார். அய்யரும் சாஸ்திரிகளும் சந்திக்கும் போதெல்லாம் ½ மணியாவது தனியே சமபாஷிக்காமல் இருக்கமாட்டார்கள். அவ்விதமேஇவர்கள் மனைவிகள் ஆகிய, லட்சுமியும் ஸரஸ்வதியும், அடிக்கடி பழகித் தோழிகளானர்கள். சுந்தரய்யர் தாயார் தன் பிள்ளையையும், சங்கரரையும் நல்ல ஸ்திதியில் பார்த்துப் பிறகு சிவலோகப்ராப்தி ஆனாள்.

அதற்குரிய எல்லாம், சிறப்பாய் நடத்தப்பட்டன. இதற்குப் பிறகு இருவர் மனைவிகளும் சற்று முன்னும் பின்னுமாக கர்ப்பவதிகள் ஆனர்கள். சுந்தரய்யருக்கு ஒருக் ஆண் குழந்தை பிறந்த இரண்டு மாஸங்கள் கழித்து சங்கர சாஸ்திரிகளுக்கு ஒரு பெண் பிறந்தது. தன் பிள்ளைக்குழந்தையை ஸரஸ்வதி பார்க்க வந்ததுபோல், லட்சு, ஸரஸ்வதி பெண்ணைப்பார்க்கப்போனாள்: இருவரும் பேசிக் கொண்டிருக்கையில், ஸரஸ்வதி:- அக்கா (லட்சுமி)! எனக்கு உடம்பு என்னமோ போல் இருக்கு: ஒன்றும் சொல்லத்தெரியவில்லை! எப்படியிருக்குமோ? ஏதாவது ஆனால் குழந்தையை நீ பார்த்து கொள்ளமாட்டாயா? என்று சொல்லிமுடித்தாள்: அதற்கு லட்சுமி, போடீபோ, இப்போ தோண்ரது அப்படி: தலைச்சன் பிரஸவமோன்னோ? எல்லாம் ஸரியாய்ப் போய் விடும் பயப்படாதே, நான் இருக்கேன் என்று தைரியம் சொல்லி வந்தாள். ஆனல் குழந்தை பிறந்த 15ம்நாள், ஸரஸ்வதி இறந்தாள். சங்கரர் துக்கித்தார்: காரியங்கள் நடந்தேறின. குழந்தைக்குப் பாலுக்குத் தகுந்த ஏற்பாடு செய்யப்பட்டது.

சங்கர சாஸ்திரிகள் துக்கம், தாயைக் கொண்டு பிறந்திருக்கும் குழந்தையின் முகத்திலும், தன் உயிர்த்தோழர் சுந்தரய்யர், மென்மதுர வாக்காலும், அவர் படித்த நாலடியார்ச்செய்யுளை "கேளாதேவந்துகிளைகளாய் இல் தோன்றி, வாளாதே போவர் மாந்தர்கள்" சொல்லிக் காட்டுவதாலும், சங்கரர் ஸ்ரீமத் சங்கர பகவத் பாதாள் துவாதசமஞ்சரிகாஸ்தோத்திரத்தில் "காதே காந்தா: கஸ்தே புத்ர:" என்று சொல்லியிருப்பதை நினைத்தும் ஒருவாறு குறைந்தது

சங்கர சாஸ்திரிகள் ஒரு பரிசாரகனை ஏற்படுத்திக்கொண்டார்: குழந்தையைப்பார்த்கவந்த இரண்டொரு சமயங்களில், பால்காரியும் இல்லாமல் குழந்தையும் அழுததால் லட்சுமி ஸரஸ்வதி குழந்தையை எடுத்துவிட்டுப்போவாள். சுந்தரய்யர் தன்னை எப்போது வேண்டுமானாலும் மாற்றிக் கொண்டேயிருப்பார்களே என்று எண்ணி இந்த ஊரையே தான் ஸ்திரமாய் இருக்கும் இடமாய் வைத்துக்கொண்டு, தன் மனைவி லட்சுமிக்கு பக்கத்துணைகளெல்லாம் ஏற்படுத்திக்கொடுத்து, தான் மாத்திரம் சமயல்காரனுடன் மாற்றினவிடமெல்லாம்போய்க் கொண்டு அப்போதப்போது ஏற்படும் லீவு, காஷுயல் லீவு: இவைகளில் மாத்திரம் இந்த ஊருக்குவர, வேண்டிய சௌகர்யங்கள் எல்லாம் அமைத்துக்கொண்டார்.

இரண்டு மாஸங்களுக்குப்பிறகு ஒரு சமயம், அய்யரும் சாஸ்திரிகளும் பேசிக் கொண்டிருக்கையில் சுந்தரய்யர் என்ன சாஸ்திரிகளே? நான், பிள்ளைக்கு பெயர் வைக்க யோசிக்கிறேன்: என்ன பெயர் வைக்கலாம்? என்றார்' அழகான பெயராய் வைக்கலாமே என்றார் சங்கரர். சுந்தரர், நீதான் சொல் எனவே "கல்யாணம்" என்ற பெயர் உனக்குப்பிடித்திருக்கா என்றார்? நீ பார்த்துச் சொன்னல் எனக்கு பிடிக்காதேயும் இருக்குமா என்றார் சுந்தரய்யர்? அப்படியே வைத்துவிடுகிறேன்.

சங்கரர்:- இந்தத்தாயற்ற குழந்தைக்கு என்ன பெயர் வைக்கலாம் நீ சொல் என்றார்? சுந்தரய்யர்:- நீயே பார்த்துவை சாஸ்திரம் எல்லாம் தெரிந்தவன்: நான் கொஞ்சம் இங்கிலீஷ் பயின்றவன். சங்கரர்:- நீ தான்வை; நீ வச்சது போரும்: என் சாஸ்திர மூட்டையைக்கட்டிவைக்கிறேன் இந்த விஷயத்தில். சுந்தரய்யர்:- பார்வதி என்று இருக்கலாமோ என்றார்: சரி என்றார் சங்கரர்.

(தொடரும்)

விழுப்புரம்.

தலைவர்களின் விஜயம்

10—12—40 செவ்வாய்க்கிழமை இரவு 7-30 மணிக்கு வேதபாடசாலை உபாத்யாயர் ஸ்ரீ P. N. நாராயண சாஸ்திரிகளின் வேண்டுகோளுக் கிணங்கி விழுப்புரத்திற்கு அகில இந்திய வர்ணாச்ரமஸ்வராஜ்ய ஸங்கம் அத்யக்ஷர் மதுரை அட்வேகேட் பிரம்மஸ்ரீ (ராவ்ஸாஹிப்) N. நடேசய்யர் அவர்களும் சென்னை மாகாண வர்ணாச்ரமஸ்வராஜ்ய ஸங்கம் கார்யதர்சி பிரம்மஸ்ரீ T. S ராமஸ்வாமி அய்யர் அவர்கள், வைதிகதர்ம ஸம்ரக்ஷக ப்ரவசனதுரீண பிரம்மஸ்ரீ சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷிதர் அவர்கள் தார்மிகப்ரபுக்களான பிரம்மஸ்ரீ குன்னம் ஸுப்ரமண்ய அய்யர் அவர்கள் முதலிய ஸனாதனி தலைவர்கள் திருவண்ணாமலையிலிருந்து இங்கு விஜயம் செய்தார்கள்.

இவ்வூர் பெரியகடைத்தெரு அருகிலுள்ள முனிஸிபல் பெண்பாடசாலையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது பிரம்மஸ்ரீ N. நடேசய்யரவர்கள் அக்ராஸனம் வகித்தார்கள். தலைவர்களுக்கு மாலை போட்டதுடன் வேதபாடசாலை உபாத்யாயரால் ஸம்ஸ்க்ருத பாஷையில் ஒரு ஸ்வாகதபத்திரிகையும் வாசித்து அகில இந்திய தலைவருக்கு கொடுக்கப்பட்டது. ஸ்ரீ நடேசய்யரவர்கள் பேசும்போது ஸனாதன தர்மம் என்றால் எல்லா உலகத்திற்கு போதுவான தென்றும் வர்ணாச்ரம தர்மய பாரத பூமியில் வைதிக மதத்தை அனுஸரிப்பவர்களுக்கு ஏற்பட்ட தர்மமென்றும் ஸ்வதர்மம் என்பது ஒவ்வொருவரும் அனுஷ்டிக்க வேண்டிய தர்ம மென்றும் சொல்லியதுடன் தர்மத்திற்கு விரோதமான சட்டங்களைக் கண்டித்தும் பேசியதுடன் அதன் நிவ்ருத்தி உபாயத்தையும் சொல்லி முடித்தார்கள். பிறகு T. S. ராமஸ்வாமி அய்யர் அவர்கள் பேசிய பிறகு பிரம்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் அவர்கள் ஸ்ரீமத்பாகவதம் முதலியமேற்கோள்களுடன் உபன்யஸித்து ஸபையோர் மனதை ஆனந்த மடையும்படி செய்தார்கள். வேதபாடசாலை வித்யார்த்திகளின் வேதகோஷத்துடன் முடிவு பெற்றது.

பி. என். நாராயண சாஸ்திரி

(7-ம் பக்கம் தொடர்ச்சி)

னங்களுமிருக்கின்றன. அந்தந்த மார்க்கத்திற்காகவென்றே வேறு சில [illegible], [illegible], [illegible] முதலிய தனி ராமாயணங்களுமிருக்கின்றன. [illegible]மெனப்படும் இந்த வால்மீகி ராமாயணத்தின் பெருமை ஒரு ஆஸ்திகமதம் அல்லது மார்க்கத்தில் துவேஷமிருப்பவர்களுக்கு விளங்காது

இதற்காகவேதான் "[illegible] [illegible]" அசூயையில்லாதவனலேயே ராமாயணம் கேட்கத்தகுந்தது என்று வால்மீகி பகவான் ஆரம்பத்திலேயே எச்சரிக்கை செய்திருக்கிறார்.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardhana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopladesikachariar, and S. Kalyanasundaram,